# இலங்கையின் தொல்பொருளியல் உரித்துகளின் முகாமைத்துவம்









அறிக்கையின் இலக்கம்: சீஏஎஸ்/சீ/பீஈஆர்/ஏ/ஏஆர்சீ/2019

**தேசிய கணக்காய்வு அலுவலகம்**

**செயலாற்றல் கணக்காய்வு பிரிவு**

# உள்ளடக்கம்


| தொடர் இல. | | விபரம் | பக்க இல. |
|---|---|---|---|
| 1 | | நிறைவேற்று பொழிப்பு | 1 |
| 2 | | அறிமுகம் | 2 |
| | 2.1 | பின்னணி | 2 |
| | 2.2 | தொல்பொருளியல் திணைக்களத்தின் தூரநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள் | 3 |
| | 2.3 | கணக்காய்விற்கான அதிகாரம் | 4 |
| | 2.4 | கணக்காய்வுக்கான தலைப்பை தெரிவு செய்வதற்கான காரணம் | 4 |
| | 2.5 | கணக்காய்வு அணுகுமுறை | 4 |
| | 2.6 | கணக்காய்வின் நோக்கம் | 5 |
| | 2.7 | கணக்காய்வின் அளவுக் கட்டளைகள் | 5 |
| | 2.8 | கணக்காய்வு விடயப்பரப்பு | 6 |
| 3 | | விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் | 6 |
| | 3.1 | தொல்பொருள் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்குரிய சட்டம் மற்றும் நிறுவனத்தின் பின்னணி | 6 |
| | 3.2 | ஆய்வு, ஆவணப்படுத்தல் மற்றும் பிரகடனப்படுத்தல் | 13 |
| | 3.3 | தொல்பொருளியல் அகழ்வு பணிகள் | 28 |
| | 3.4 | பாதுகாப்பு | 37 |
| | 3.5 | கனிமம் மற்றும் பாறைகளைப் பிரித்தல் நடவடிக்கைக்கான பரிந்துரைகளை வழங்குதல் | 50 |
| | 3.6 | பாதுகாப்பற்ற மற்றும் அழிவடையும் ஆபத்திற்கு முகங்கொடுத்துள்ள தொல்பொருள் தளங்கள் | 58 |
| | 3.7 | உகந்த பதவியணியினரின் தேவைப்பாடு | 78 |
| 4 | | பரிந்துரைகள் | 81 |
| 5 | | பின்னிணைப்பு | 82-99 |

## 1. நிறைவேற்று பொழிப்பு

இலங்கையின் முழு தொல்பொருள் உரித்துக்களும் 1815ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதிக்குரிய இடங்கள், நினைவுச் சின்னங்கள், நகரக்கூடிய அரும்பொருட்கள் மற்றும் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக பழையன என்பன தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ''பாதுகாப்பானது'' என்று அறிவிக்கப்பட்டுள்ள இடங்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் ஆகியவற்றைக் உள்ளடக்கியுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே இலங்கையின் தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் மீது தொல்பொருளாளர்களின் முறையான அக்கறை ஏற்பட தொடங்கியது. அதே போல் நாட்டிலுள்ள பிரதான தொண்மையான இடங்கள் முறையாக ஆய்வு செய்ய அரசாங்கம் முன்வந்தது. தொல்பொருள் இடங்களை பராமரிக்கும் உயரிய நிறுவனமாகவே 1890ஆம் ஆண்டு தொல்பொருயளியல் திணைக்களம் அமைக்கப்பட்டது.

இலங்கையின் தொல்பொருள் பாரம்பரியம் தேசத்தின் கடந்த காலத்துக்குரிய ஆயிரக் கணக்கான தொல்பொருள் இடங்கள், பழைய நினைவுச் சின்னங்கள், நகரக் கூடிய கலைப்பொருட்கள் என்பதுடன், இந்த பாரம்பரியங்களை முறையாகப் பராமரித்து, எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்குவது தேசிய தேவையாகும். தற்போதைய காலக்கட்டத்தில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதன் காரணமாக, இந்தப் பாரம்பரியங்களுக்கு அச்சுறுத்தல் மற்றும் அது தொடர்பில் சமூகத்துக்குள் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துவதன் காரணமாக இந்தத் தலைப்பு கணக்காய்வுக்காக தெரிவு செய்யப்பட்டது. இந்த கணக்காய்வின் நோக்கம் இலங்கையில் தொல்பொருள் பாரம்பரியத்தை நிர்வகிப்பதில் தொல்பொருள் துறையின் பங்கை மதிப்பீடு செய்வதாகும்.

அரும்பொருட்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்குத் தேவையான பின்னணியை பலப்படுத்துவதற்கு முக்கியமாக அமையும் தொல்பொருள் கட்டளைச் சட்டம் மற்றும் தேசிய கொள்கை சரியான நேரத்தில் திருத்தப்படாமை, அடையாளம் காணப்பட்ட தொல்பொருள் பாதுகாப்பு நினைவுச் சின்னங்கள், சரியான திட்டத்துடன் திணைக்களத்தின் செயற்பாடுகள் முன்னெக்கப்படாமை, தொல்பொருள் முகாமைத்துவ திட்டத்தை செயற்படுத்தும் போது ஏற்படும் தாமதம் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் முழுமைப்படுத்தப்படாமை, அடையாளம் காணப்பட்டுள்ள தொல்பொருள் பாதுகாப்பு நினைவுச் சின்னங்கள், பழைய நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் வனங்கள் உள்ளிட்டவை தொடர்பில் அரச வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடுவதில் தாமதம், மனித

செயற்பாடுகள் ஊடாக முன்னெடுக்கப்படும் தொல்பொருள் அழிப்பு காரணமாக, தொல்பொருள்களின் பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினைகள் எழுந்துள்ளமை, நிதி பெறுவதில் சிக்கல்கள், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான பொருள்களை விநியோகிப்பதில் காணப்படும் தாமதம், தொல்பொருள் வள முகாமைத்துவம் மற்றும் ஆய்வுக்கான வல்லுனர்கள் மற்றும் நிபுணத்துவம் உடைய அனுபவமிக்க தொழில் வல்லுனர்கள் மற்றும் தொல்பொருள் பாதுகாப்புக்கு போதுமானளவு மனித வளம் மற்றும் ஏனைய வளங்கள் திணைக்களத்தில் போதுமானளவு இன்மை போன்ற காரணங்களே, பிரதானமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

## 2. அறிமுகம்

### 2.1 பின்னணி

மிகவும் முன்னேற்றகரமான நாகரிகம் காணப்பட்ட மற்றும் பெருமை மிக்க வரலாற்று பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கை, மகத்தான மதிப்புள்ள தொல்லியல் மற்றும் எண்ணற்ற தொல்பொருள்களைக் கொண்ட பெருமை மிக்க நாடாகும்.

1815ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் திகதிக்கு முன்னதான காலப்பகுதியிலிருந்து காணப்பட்ட அல்லது இருக்கலாம் என நியாயமான முறையில் நம்பக்கூடிய மற்றும் நூறு ஆண்டுகளுக்குக் குறைந்த காலப்பகுதியில் காணப்பட்டதாக அல்லது இருக்கலாம் என நம்பக்கூடிய இலங்கையில் இருக்கும் அல்லது இருக்கலாம் என கண்டுபிடிக்கப்பட்ட மனித வர்க்கத்தின் பாரம்பரியத்தின் சில பகுதிகள் தொடர்பான முதன்மைத் தகவல்கள், தொல்பொருள் முறைகள் ஊடாக வழங்கிய மனித இருப்பு தகவல்கள், இலட்சிணை மற்றும் மனித நடவடிக்கைகளின் அம்சங்கள் தொடர்பான இடங்கள், கைவிடப்பட்ட கட்டமைப்புக்கள், நிலத்தின் கீழ் மற்றும் நீருக்கடியில் உள்ள தளங்கள் உட்பட அனைத்து வகையான இடிபாடுகள் மற்றும் அதனை அண்மித்த இலகுவாகக் கொண்டுச் செல்லக் கூடிய அனைத்து வகையான கலாச்சார பொருட்கள் மற்றும் பொருள் காரணிகள் தொல்பொருள் பாரம்பரியமாகக் கருதப்படுகின்றன.

சரியான பழைய நினைவுச் சின்னங்கள் மற்றும் அழிவடைந்து அல்லது அகற்றப்பட்டு அல்லது ஆபத்தை எதிர்நோக்கி, பொது நலனுக்காக பாதுகாக்கப்பட வேண்டிய பாதுகாப்பு சின்னங்களாக அறிவிக்கப்பட்ட தொல்பொருள் சின்னங்கள், இடங்களை பாதுகாத்தல் தொல்பொருள் பாரம்பரியத்தை முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கையாக குறிப்பிடலாம்.

தொல்பொருள் திணைக்களம் 1890ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டாலும் தொல்பொருள் தொடர்பான ஆரம்பக்கட்ட வேலைகள், பல ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட தொல்பொருள் நடவடிக்கைகளில் நாடுபூராகவும் உள்ள பல தொல்பொருள் பாரம்பரியங்களை அடையாளம் காணப்பட்டதைப் போலவே நாட்டின் மீது அக்கறையையும் வெளிக்காட்டின.

இவ்வாறான தொல்பொருள் பாரம்பரியங்களை பாதுகாப்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கடமை என்பதுடன், இதன் பாரிய பொறுப்பு தொல்பொருள் திணைக்களத்திடமே காணப்படுகின்றது.

## 2.2 தொல்பொருளியல் திணைக்களத்தின் தூரநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

**தூரநோக்கு**

--------------------

இலங்கை தொல்பொருள் திணைக்களத்தின் தூரநோக்காவது இலங்கையின் தொல்பொருள் உரித்துகள் தொடர்பிலான உரிய முகாமைத்துவத்தினை மேம்படுத்தல் ஆகும்.

**செயற்பணி**

-------------------

இலங்கை தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பணியாவது இந் நாட்டின் தொல்பொருள் உரித்துகளை முகாமை செய்வதற்கு அனுசரனை வழங்குதல் மற்றும் முதன்மை கண்காணிப்பு நிறுவனமாக செயற்படல் ஆகும்.

**குறிக்கோள்கள்**

---------------------------

தமது செயற்பணியை அடைந்துகொள்வதற்காக இலங்கை தொல்பொருள் திணைக்களத்தின் குறிக்கோளாக அமைந்துள்ளது பின்வரும் விடயங்கள் ஆகும்.

- அபிவிருத்தி வளங்கள்
- மனித
- நிறுவன
- ஒட்டுமொத்த இலங்கையினதும் தொல்பொருளியல் உரித்துகள் தொடர்பில் மக்களின் அறிவினை அபிவிருத்தி செய்தல்.

- வேலைத்தளம் / நினைவுச் சின்னங்கள் மற்றும் அசையும் அரும்பொருட்களினை பாதுகாத்தல்.
- ஆராய்ச்சிகள்

## 2.3 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிகளுக்கமைய மற்றும் 2018 இலக்கம் 19 தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 3 (1)ஈ, 5(2), 12(ஏ) ஆகிய உறுப்புரைக்களுக்கமைய எனது கண்காணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

## 2.4 கணக்காய்வுக்கான தலைப்பை தெரிவு செய்வதற்கான காரணம்

பழமையான வரலாற்று பாரம்பரியத்தைக் கொண்டுள்ள இலங்கை அந்த வரலாற்று பாரம்பரியத்தை எதிர்காலத்திலும் பாதுகாக்க வேண்டும். தற்போதைய காலகட்டத்தில் நடைபெறும் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் வேறு சட்டவிரோத நடவடிக்கைகளைப் போல அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்தும் போது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, இந்த பாரம்பரியத்தைக் கட்டிக்காப்பதில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை கணக்காய்வுக்கான தலைப்பை தெரிவு செய்வதற்கான காரணமாகும்.

## 2.5 கணக்காய்வு அணுகுமுறை

(அ) தொல்பொருளியல் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடல் மற்றும் திணைக்கள நடைமுறைகளை ஆய்வு செய்தல்.

(ஆ) 1940 இன் 09 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டம், 1998 இன் 24 ஆம் இலக்க அரும் பொருட்கள் (திருத்தச் சட்டம்), தேசிய தொல்பொருளியல் கொள்கை - 2006, 2005 இன் 02 ஆம் இலக்க அபராதத் தொகையை அதிகரித்தல் (திருத்தச் சட்டம்), 1979 இன் 7 ஆம் இலக்க அரச உடைமைய மீளப் பெற்றுக்கொள்ளும் அதிகாச்சட்டம், 2000 ஒக்டோபர் 4 ஆம் திகதிய 1152/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல், 2011 பெப்ரவரி 02 ஆம் திகதிய 11/0169/555/001 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம், நிறுவன நடைமுறைகள் மற்றும் உள்ளக சுற்றுநிருபத்தை ஆய்வு செய்தல்.

(இ) தொல்பொருள் பாரம்பரியத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்காக செயற்பாட்டு நடைமுறைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைத் திட்டங்களின் செயற்றிறன் பரிசோதனை.

(ஈ) அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள தொல்பொருட்கள் அமைந்துள்ள இடங்களை பௌதீக ரீதியாக கண்காணித்தல்.

## 2.6 கணக்காய்வின் நோக்கம்

‘‘இலங்கையின் தொல்பொருள் பாரம்பரியத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வது தொடர்பில், தொல்பொருள் திணைக்களத்தின் பணியை மதிப்பிடுதல்.’’

இதன் போது தொல்பொருள் பாரம்பரியங்களைப் பாதுகாப்பது தொடர்பில் இலங்கையில் பயனுள்ள சட்ட விதிகள் மற்றும் அந்தப் பணியை நிறைவேற்றும் பிரதான நிறுவனமான தொல்பொருளியல் திணைக்களத்தின் செயல்திறன் தொடர்பாக இங்கு ஆழமாக கலந்துரையாடப்படுகின்றது.

அவ்வாறே மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட தொல்பொருள் தளங்கள் பல சேதமடைந்துள்ளமை அடையாளம் காணுதல் மற்றும் இந்த முழு கண்காணிப்பு தொடர்பில் பரிந்துரைகளை முன்வைத்தல் என்பன இந்த கணக்காய்வின் நோக்கங்களாகும்.

## 2.7 கணக்காய்வின் அளவுக் கட்டளைகள்

(அ) 1940 இன் 09 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச்சட்டம்

(ஆ) 1998 இன் 24 ஆம் இலக்க தொல்பொருள் (திருத்தச் சட்டம்)

(இ) தேசிய தொல்பொருள் கொள்கை – 2006

(ஈ) 2005 இன் 02 ஆம் இலக்க அபராதத் தொகையை அதிகரித்தல் (திருத்தச் சட்டம்)

(உ) 1979 இன் 07 ஆம் இலக்க அரசுடமையை மீளப்பெறும் அதிகாரச்சட்டம்.

(ஊ) 2000 ஒக்டோபர் 4 ஆம் திகதிய 1152/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்

(எ) 2011 பெப்ரவரி 02 ஆம் திகதிய 11/0169/555/001 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம்.

(ஏ) நிறுவன நடைமுறைகள் மற்றும் உள்ளக சுற்றுநிருபங்கள்.

## 2.8 கணக்காய்வு விடயப்பரப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குள் இந்த கணக்காய்வு பணி முன்னெடுக்கப்பட்டது.

(அ) என்னால் உயரிய கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு கொள்கைகளுக்கு (ISSAI 3000 - 3200) அமைய, என்னுடைய கணக்காய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்த கணக்காய்வின் போது, தொல்பொருள் பாரம்பரியத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள, அடையாளம் காணப்படாத மற்றும் பாரம்பரியங்கள் அழிவடைந்த மாதிரி அடிப்படையிலான பௌதீக ரீதியான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது.

# 3. விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புகள்

## 3.1 தொல்பொருள் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்குரிய சட்டம் மற்றும் நிறுவனத்தின் பின்னணி

### 3.1.1 தேசிய கொள்கை

**(அ) தேசிய கொள்கைகளின் கீழான பணிகளாவன**

"இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் தேசிய தொல்பொருள் கொள்கை – 2006" இதில் 2008 ஒக்டோபர் 20 ஆம் திகதி இலக்கம் 1572/4 ஆம் என்ற அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேசிய கொள்கை அறிவிக்கப்பட்டது.

இலங்கையின் முழு தொல்பொருள் பாரம்பரியத்தை உரிய முறையில் முகாமைத்துவத்தின் மேம்பாட்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு

சட்டகமொன்றினை தயாரித்தல் தேசிய தொல்பொருள் கொள்கைகளின் நோக்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

இதன் கீழ் கீழேயுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான இலக்கை கொண்டிருத்தல்.

i. நிறுவன மற்றும் மனித வள மேம்பாடு
ii. முழு தொல்பொருள் பாரம்பரியத்தை பாதுகாத்தல்
iii. தொல்பொருள் தளங்கள், நினைவுச் சின்னங்கள், நகரக் கூடிய தொல்பொருள்களை ஆவணப்படுத்தல்
iv. தொல்பொருள் பாரம்பரியம் தொடர்பாக மக்கள் விழிப்புணர்வை ஊக்குவித்தல்
v. தொல்பொருள் தளங்கள், நினைவுச் சின்னங்கள், நடமாடக் கூடிய தொல்பொருள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு
vi. தொல்பொருள் ஆய்வுகளை முன்னெடுத்தல்

**(ஆ) தேசிய கொள்கையைப் நாளதுவரையாக்குதல்**

தேசிய தொல்பொருள் கொள்கையை அறிமுகப்படுத்தி இன்றுடன் 10 வருடத்துக்கு அதிகமாகச் சென்றிருந்தாலும் அதன் நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக, தொல்பொருள் திணைக்களம் அவதானம் செலுத்தப்படவில்லை என்பதுடன், இது தொடர்பான தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவத்தை முன்னெடுப்பதில் தோல்வி ஏற்பட்டிருந்தமை ஆய்வுகளின் அறிக்கைகளில் அறிந்துக்கொள்ள முடிந்தது. இதன்போது தொல்பொருள் திணைக்களத்தில் 1890 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட தேசிய தொல்பொருள் கொள்கைகளை அறிவிப்பதற்காக 118 வருடங்கள் கடந்திருந்தாலும் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை என்பதுடன், தற்போதைய காலக்கட்டத்துக்கு பொருந்தும் வகையில், தேசிய கொள்கை புதுப்பிக்கப்படவில்லை.

### 3.1.2 1998 இன் 24 ஆம் இலக்க அரும் பொருட்கள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1940 இன் 09 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச்சட்டம்

**(அ) சட்டரீதியான ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கான பொருண்மைத்தன்மை**

1940 இன் 09 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளை பலப்படுத்துவதற்கு பதிலாக, 1998 இன் 24 ஆம் இலக்க தொல்பொருள் (திருத்தப்பட்ட) சட்டத்தின் முதலாவது கட்டளைச் சட்டத்தில் உறுப்புரை திருத்தம் மற்றும் புதிய உறுப்புரையை உள்ளடக்கும் அதிகாரம்

காணப்பட்டாலும் முதலாவது கட்டளைச் சட்டத்தில் செய்யபட்ட திருத்தத்தில் தொல்பொருள் பாரம்பரியங்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்காக, போதுமானளவு சட்டவிதிகள் உள்ளடக்கப்படவில்லை.

இதன் காரணமாக கீழே குறிப்பிடப்பட்டமைக்கு அமைய, தொல்பொருள் பாரம்பரியத்தைப் பாதுகாப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்தது. மேலும் இது தொடர்பில் சிலசில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெளிவுபடுத்தப்பட்டாலும் தொல்பொருள் பாராம்பரியம் அழிவடைவது அதிகரித்துள்ளதால், அந்த நடவடிக்கைகள் தொல்பொருள் பாரம்பரியங்களை பாதுகாப்பதற்கு போதுமானதாக இருக்கவில்லை.

i. முறைசாரா மனித நடவடிக்கைகள் மூலம் தொல்பொருட்களுக்கு ஏற்படும் பாதிப்பால் தொல்பொருள் அழிவை தடுப்பதற்காக மற்றும் கட்டுப்படுத்தல்
ii. தொல்பொருட்கள் திருட்டை குறைத்தல் மற்றும் தொல்பொருட்களைப் பாதுகாத்தல்
iii. தொல்பொருட்களைத் தேடுவதற்காக சட்டவிரோத அகழ்வு மற்றும் கட்டுமாணப் பணிகளை தடுத்தல்
iv. தொல்பொருட்கள் திருட்டு மற்றும் அதனை அழிப்பவர்களை சட்டத்தின் பிடியில் நிறுத்துதல்
v. தனியாரிடம் காணப்படும் தொல்பொருட்களை முகாமைத்துவம் செய்தல்
vi. ஆராய்ச்சி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
vii. தொல்பொருள் நிலங்களை விரைவாக வேறாக்குதல் மற்றும் ஆவணங்களை நெறிபடுத்த நடவடிக்கை எடுத்தல்
viii. தொல்பொருள் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் போது, அதிகாரிகளுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்த்தல்

**(ஆ) தொல்பொருள் பாரம்பரியம் அழிவடைகின்றமை அதிகரித்துச் செல்லல்**

தொல்பொருள் பாரம்பரியங்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வதற்காக, போதுமானளவு சட்டவிதிகள் உள்ளடக்கப்படாமை, மனித வளம் மற்றும் ஏனைய வளங்களின் பற்றாக்குறை ஏற்படுகின்றமை இதன்போது கண்காணிக்கப்பட்டது. அதற்கமைய கடந்த சில வருடங்களுக்குள் தொல்பொருள்கள் அழிவடைந்தமை

மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பால் அது தொடர்பாக அறவிடப்பட்டுள்ள அபராதத் தொகையில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை இதன் மூலம் உறுதியாகின்றது.

| | ஆண்டு | | | |
|---|---|---|---|---|
| | **2019 ஜூன் 30ஆம் திகதி** | **2018** | **2017** | **2016** |
| தொல்பொருள் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டு | 163 | 332 | 290 | 203 |
| தொல்பொருட்களை அழிப்பது தொடர்பில் நீதிமன்ற வழக்குகளுக்கு அமைவாக சந்தேகநபர்கள், குற்றவாளிகளின் எண்ணிக்கை | 464 | 824 | 631 | 565 |
| தொல்பொருள் குற்றங்களுக்காக நீதிமன்றம் ஊடாக அறவிடப்பட்ட அபராதத் தொகை (ரூபா) | 7,628,500 | 21,884,000 | 18,983,000 | 21,295,800 |

(இ) இந்த நிலைமையின் கீழ் தொல்பொருள் கட்டளைச் சட்டம் திருத்தத்துக்காக திணைக்களத்தின் அவதானம் 2019 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்தத் திருத்தம் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தால் மிகவும் சரியாக அமைந்திருக்கும் என்பதுடன், அதற்காக நீண்ட காலம் தாமதம் ஏற்பட்டதாக கண்காணிக்கப்பட்டுள்ளது.

(ஈ) எனினும் தொல்பொருள் சட்டத்தின் கீழ் காணப்படும் குறைப்பாடுகளை தவிர்ப்பதற்காக புதுப்பிப்பதற்கான புதிய ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்காக தற்போது கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 3.1.3 தொல்பொருள் பாரம்பரியங்களை முகாமைத்துவம் செய்யும் உயரிய நிறுவனம்

#### (அ) தொல்பொருள் திணைக்களம் மற்றும் இலங்கை தொல்பொருளாளர்களின் சபை

இலங்கையின் தொல்பொருள் பாரம்பரியத்தை முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கையின் கொள்கை வகுத்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துவது தொடர்பான உயரிய நிறுவனமாக 1940 இன் 09 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழ், தொல்பொருள் திணைக்களத்துக்கு தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பதவியை வகிக்கும் தொல்பொருள் திணைக்களத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கையின் தொல்பொருள் பாரம்பரியத்தை முகாமைத்துவம் செய்யும் நடவடிக்கையின் கொள்கை வகுத்தல் மற்றும் அவற்றை செயற்படுத்தல் தொடர்பான உயரிய நிறுவனமாக தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

#### (ஆ) ஏனைய நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டு முகவர்கள்

நாட்டில் செயற்படும் முகவர் நிறுவனமாக மத்திய கலாசார அறக்கட்டளை நிதியம், தொல்பொருள் தொடர்பில் கௌரவ பட்டம் மற்றும் முதுநிலை பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகம், தேசிய அருங்காட்சியக திணைக்களம் மற்றும் தேசிய ஆவணக் காப்பக திணைக்களம் என்பன செயற்படுகின்றன.

பல்கலைக்கழகங்கள், கலாசார பாரம்பரியம் தொடர்பாக செயற்படும் மன்றம், இயற்பியல் திட்டமிடல் துறை, புனித பூமி அமைப்புகள், மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர், கிராம அலுவலர், பொலிஸ் திணைக்களம், புவியியல் மற்றும் சுரங்கப் பணியக அலுவலகம், வனஜீவராசிகள் திணைக்களம், வன பாதுகாப்பு திணைக்களம், கல்வி திணைக்களம், இலங்கை சுங்கம், சட்டமா அதிபர் திணைக்களம், சுற்றுலா சபை உள்ளிட்ட அரச நிறுவனங்கள் மற்றும் தொல்பொருள் தன்னார்வ அமைப்புகள், விகாரைகள், ஏனைய மதத்தலங்கள், தொழில்சார்பற்ற தொல்பொருளாலர்கள் உள்ளிட்ட தனியார் பிரிவு என்பன மூன்றாம் நிலை செயற்பாட்டு முகவர் நிறுவனங்களாகும்.

**(இ) தொல்பொருள் திணைக்களகத்துக்குரிய அமைச்சின் கடமை பொறுப்புகள்**

தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவத்தின் போது, தொல்பொருள் கட்டளைச் சட்டம் கொள்கை மற்றும் ஏற்பாடுகளை செயற்படுத்தல், அதிகாரமளிக்கும் நோக்கத்துக்காக உத்தரவுகளை உருவாக்குதல், அவற்றின் செயற்பாடுகள் நிலைமைகள் குறித்து மேற்பார்வை, தொல்பொருள் நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தின் வருடாந்த கொள்கையைப் பெற்றுக்கொள்ளல், பௌதீகம் மற்றும் மனிதவளம் மற்றும் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்ளல் போன்ற கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பு தொல்பொருள் திணைக்களத்துக்குரிய அமைச்சுக்கு பகிரப்பட்டுள்ளது. இருப்பினும் ஒதுக்கீடுகள் போதுமானளவு இன்மை, மனித வளம் தொடர்பான பிரச்சினை காரணமாக, திணைக்களத்தின் கடமைகளை முன்னெடுப்பதில் தடைகள் ஏற்பட்டுள்ளன.

### 3.1.4 மத்திய கலாசார நிதியம்

**(அ) நிதி திரட்டலுக்கான பங்களிப்பு**

1980 இன் 57 ஆம் இலக்க என்ற மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் 8 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைய, கலாசார நினைவுச் சின்னங்கயை அபிவிருத்தி செய்யும் போது ஏற்படும் செலவீனங்களைச் செலுத்துவதற்கான நிதியை வழங்குவது மத்திய கலாசார நிதியத்தின் பிரதான கடமையாகும். இதற்கமைய, தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவத்தின் போது, நிதியுதவி செய்யும் பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தது.

அந்த பங்களிப்பை சட்டபூர்வமாக உரிய முறையில் தீர்மானிப்பதற்காக தொல்பொருள் இடங்களின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்துக்காக "தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவம் பொறுப்பு என்ற பெயரில் நிதியம் ஒன்றை அமைத்தல்" என்ற தலைப்பில் 2011 ஜனவரி 18 ஆம் திகதி இலக்கம் 11/0169/555/004 என்ற பத்திரம் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டதுடன், அதற்காக மத்திய கலாசார நிதியத்தால் பெறும் வருமானத்தில் 25 சதவீதம் தொல்பொருள் இடங்களை நடத்திச் செல்லல் மற்றும் தொல்பொருள் பாரம்பரியம் முகாமைத்துவத்துக்காக அப்போது காணப்பட்ட தேசிய பாரம்பரியம் தொடர்பான அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டும் என அமைச்சரவை தீர்மானித்திருந்தது. எனினும் அந்த நிதியத்தை அமைக்க நடவடிக்கை எடுக்காமல் தொல்பொருள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் வேலைத்திட்டத்துக்காக மதிப்பீடுகளை

முன்வைக்க மாத்திரம் நடவடிக்கை எடுத்து மத்திய கலாசார நிதியம் அனுமதிக்கும் திட்டங்களுக்காக மாத்திரம் நிதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய கடந்த 4 வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | **2018 மில்லியன் ரூபாய்** | **2017 மில்லியன் ரூபாய்** | **2016 மில்லியன் ரூபாய்** | **2015 மில்லியன் ரூபாய்** |
|---|---|---|---|---|
| மத்திய கலாசார நிதியத்தின் அனுமதிப்பத்திரம் வருமானம் | 4,253.64 | 3,829.26 | 3,445.93 | 2,751.06 |
| தொல்பொருள் திணைக்களத்துக்கு கிடைக்க வேண்டிய 25 சதவீத நிதி | 1,063.41 | 957.32 | 861.48 | 687.77 |
| அமைச்சரவையின் தீர்மானத்துக்கு அமைய தொல்பொருள் பாரம்பரியத்துக்கு பெறப்பட்ட குறைந்த நிதி | 571.28 | 764.26 | 756.99 | 547.93 |

இதற்கமைய தொல்பொருள் பாரம்பரிய முகாமைத்துவ நடவடிக்கைகளுக்காக கடந்த 04 வருடங்களில் மொத்தமாக 2,640.46 மில்லியன் ரூபாய் மத்திய கலாசார நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ள தொல்பொருள் திணைக்களத்தால் முடியாது போயுள்ளமை கணகாணிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) நிதியத்தின் பயன்பாடு**

தொல்பொருள் பாரம்பரியங்களை முகாமைத்துவம் செய்வதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட நிதியத்துக்கு அமைவாக வேலைத்திட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துவதில் தாமதம், நடவடிக்கைகளை

நிறைவு செய்யாமை, பௌதீக ரீதியான செயற்பாடுகளில் மோசமான முன்னேற்றம், சட்டரீதியாக கிடைக்க வேண்டிய நிதி உரிய முறையில் கிடைக்காமை மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு காரணமாக அமைந்துள்ளமை கண்காணிக்கப்பட்டுள்ளது. திட்ட நடவடிக்கைகளை செயற்படுத்தும் போது, செயற்திறனின் முன்னேற்றத்தில் தோல்விக்கமைய, மத்திய கலாசார நிதியத்திலிருந்து கிடைக்கப்பெற்ற நிதியை பயன்படுத்தாமல், நீண்டகாலம் பொது வைப்பில் வைத்திருந்தமை கண்காணிக்கப்பட்டுள்ளது. 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை பயன்படுத்தாமல் நீண்ட காலம் பொது வைப்பில் வைக்கப்பட்டிருந்த நிதி 1-3 வருடங்களுக்குரிய 83.66 மில்லியன் ரூபாய் என்பதுடன், 3-5 வருடங்களுக்குரிய 16.20 மில்லியன் ரூபாயாக காணப்படுகின்றது.

## 3.2 ஆய்வு, ஆவணப்படுத்தல் மற்றும் பிரகடனப்படுத்தல்

### 3.2.1 தொல்பொருளியல் மரபுரிமைகளை அறிந்து கொள்ளல்

நிலத்தில் அல்லது கடற்பரப்பில் அமைந்திருக்கும் அசையாத மற்றும் அசையும் தொல் பொருளியல் மரபுரிமைகளை அறிந்து கொள்ளல், அறிக்கையிடல், தொல் பொருள் இடங்களுக்கு ஏற்படும் தாக்கங்களை மதிப்பிடல், தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பிரகடனப்படுத்தல், அரும்பொருட்களின் அழிவு, களவாடப்படல் முறையற்ற பாவனையைத் தடுத்தல். தற்செயலாக வெளிப்படும் தொல்பொருட்கள் தொடர்பில் கட்டளைச்சட்ட ஒழுங்கு முறைமைகளை நடைமுறைப்படுத்தல், புவியியற் தரவு ஒழுங்கமைப்பைத் தயாரித்தலும் இற்றைப்படுத்தி நடாத்திச் செல்லும், கனிய மற்றும் கல்வெட்டு அகழும் நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற தொல்பொருள் மரபுரிமைகளைச் சிறப்பாக முகாமைப்படுத்துவதற்குத் தேவையான பல்வேறு செயற்பாடுகள் தொல்பொருள் ஆய்வுப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கண்டறியப்பட்ட தொல்பொருளியல் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் தொடர்பில் அறிக்கையிடல்

முகாமைத்துவ நோக்கில் தேசிய மட்டத்தில் நாடாளவரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஆய்வுக்கான தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை அறிந்து கொள்ளலும், அறிவித்தலும், குடியேற்றங்கள் காரணமாக தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச்

சின்னங்களில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள், அபிவிருத்தி செயற்திட்டங்கள் காரணமாக அரும் பொருட்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதும் மனிதர்களின் சிந்தனைத் திறனால் ஏற்படுத்தப்படும் தொல்பொருள் அழிவுகள் கூடிய பிரதேசம் மற்றும் அரச முன்னுரிமை போன்ற மூலப் பிரமாணங்களை ஏதுவாகக் கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வாறு அறியப்பட்ட நிலமானது முறையான ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு அந் நிலப்பரப்பிற்கு பாதுகாப்பு வலயம் தேவைப்படுமாயின் அவற்றை உள்ளடக்கிய மொத்தத் திட்டமொன்றை மற்றும் எல்லைகளுக்குரிய GPS தொகுதியுடன் கூடிய விபரங்களுடனான அறிக்கையொன்றை பிரதேச உதவிப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் பணிப்பாளரினால் பெற்றுக் கொள்ளப்பட்டு நிலத்திற்கான அளவீட்டு கட்டளையை வழங்குமாறு குறித்த பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

**(ஆ) தொல்பொருள் மரபுரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்களின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கல்.**

ஏதேனும் குறிப்பிட்ட நிலப்பரப்பு அல்லது இடத்தினை பாதுகாக்கும் வகையில் மரபு ரீதியிலான பலனைப் பெற்றுக் கொள்ளவதற்காகவும் பிரதேசம் அல்லது இடத்தில் காணப்படும் தொல்பொருளியல் மரபுரிமைகள் மற்றும் சுற்றுச் சூழல் தரவுகளைத் தெரிந்து கொள்ளும் விரிவான அறிக்கையிடல் நோக்கில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். நிலப்பரப்பு மற்றும் இடத்தினைத் தெரிவு செய்கையில் நவீன குடியேற்றங்கள் மூலம் தொல்பொருளியல் மரபுரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பில் முன்னுரிமை வழங்கி செயற்திட்டங்கள் மற்றும் கண்காணிப்புச் செயலகங்களின் ஒழுங்கு விதிகளின்படி, விரிவான ஆய்வினைத் தீர்மானிக்க வேண்டியிருந்த போதிலும், கடந்த காலப்பகுதிகளில் நிலப்பரப்பு மற்றும் இடர்கள் தொடர்பில் ஆரம்ப மூலப்பிரமாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2.2 தொல்பொருளியல் மரபுரிமைகளை அறிந்து கொள்வதற்குத் திட்டமிடல்

தேசிய ரீதியில் தொல்பொருளியல் இடங்களை அறிக்கையிடுவதற்காக நீண்டகால வேலைத்திட்டங்களைத் தயாரிக்கப்பட வேண்டியதுடன், அதில் ஒவ்வொரு வருடத்திலும் ஆய்வு நிகழ்த்தப்பட்ட பிரதேசம் மற்றும் சதுர கிலோ மீற்றர் அளவு, அவ்வாறான ஒவ்வொரு பிரதேசங்களையும் தெரிவு செய்வதற்கான காரணம், ஆய்வு மேற்கொள்ளப்படும் கால எல்லை, போன்ற விபரங்கள் நீண்டகால

வேலைத்திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட வேண்டியதாகும். ஆயினும், முறையான வேலைத்திட்டத்தின்படி, தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**3.2.3 தொல்பொருள் நினைவுச் சின்னம், இடங்கள் மற்றும் வேறுபடுத்தப்பட்ட தடைசெய்யப்பட்ட நிலப்பரப்புகளை அறிக்கையிடலும் பிரகடனப்படுத்தலும்.**

**(அ) படிவங்களை பூரணப்படுத்தல், தேவையான இடங்களுக்கு அனுப்புதல், மற்றும் ஆவணங்களைப் பேணுதல்.**

பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள், மற்றும் தடை செய்யப்பட்ட இடங்களை பிரகடணப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்றமை தொடர்பில் ஆ.ஆ 15,16 படிவத்தினை பூரணப்படுத்தி பிரதேச உதவிப் பணியாளர் / விடயப் பொறுப்பு உதவிப் பணியாளர் ஊடாக ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் பணிப்பாளருக்கு அனுப்பபடல் வேண்டும்.

ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் செயல் முறைமையின் ஒழுங்குகளின்படி இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை அறிக்கையிடல் தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதற்கு பிரதேச காரியாலயம் மற்றும் பிரதான காரியாலயத்தில் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவினூடாக மாவட்ட ஆவணத்தின் விடய பொறுப்பு உத்தியோகத்தரினால் (ஆய்வு ஆவணம் 02 ஆவணம்) பேணப்பட்டு வருதல் வேண்டும்.

தொல் பொருட்களுடன் கூடிய அரச இடங்களை அறிந்து, ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் ஆ.ஆ 17 படிவத்தின் மூலம் பிரதான காரியாலயத்தின் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் பிரிவிற்கு அனுப்பப்படல் வேண்டியதுடன், அது பிரதேச உதவி பணிப்பாளரின் பொறுப்பு ஆகும்.

**(ஆ) ஒழுங்கான தரவுக் கோவையொன்றைப் பேணுதல்**

இலங்கையில் தொல்பொருளியல் மரபுரிமைகளை அறிந்து கொள்வதற்காக தொல்பொருள் திணைக்களம் தாபிக்கப்பட்ட 1890 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையிலும் ஆய்வுச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவ்வாய்வு தொடர்பான ஒழுங்கான தரவுகள் கோவையொன்றோ அல்லது ஒழுங்குமுறைமையோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரும் பொருட்களைப் பேணல்**

தொல் பொருள் திணைக்களம் தாபிக்கப்பட்ட 1890 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையிலுமான 128 வருட காலத்தினுள் இலங்கையின் 25 மாவட்டங்களுக்கான அரச வர்த்தகமானியினூடாகப் பிரகடனப்படுத்தப்பட்ட புராதன மற்றும் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் வேறுபடுத்தப்பட்ட தொல்பொருள் தடை செய்யப்பட்ட இடங்கள் மற்றும் தொல் பொருள் பேணுதல் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தொல்பொருள் புராதன மற்றும் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் | 2,712 |
| ஒதுக்கப்பட்ட தொல்பொருள் தடை செய்யப்பட்ட இடங்கள் | 227 |
| தொல்பொருள் காப்பகங்கள் | 174 |

தொல்பொருள் காப்பகம் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர், அந்த வர்த்தமானியின் பிரதியானது குறித்த மாவட்ட செயலாளருக்கு பிரதேச செயலாளருக்கு, கிராம உத்தியோகத்தருக்கு அனுப்புவதற்கு விடயப் பொறுப்பு உதவிப் பணியாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 3.2.4 பொலனறுவை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட ஆய்வு நடவடிக்கை

விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

**(அ) ஆய்வு நடவடிக்கைகளை அறிந்து கொள்ளுதல்**

பொலனறுவை மாவட்டம் முழுவதிலும் நினைவுச் சின்னங்கள், பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் காப்பகங்கள், போன்ற தொல்பொருளியல் ரீதியான சான்றுகள் காணப்படும் இடங்கள் மற்றும் சொத்துக்களை அறிந்து கொள்வதற்கான ஆய்வு நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டளவில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2018 ஆம் ஆண்டு வரவு, செலவு ஒதுக்கீடு மூலம் ‘‘ஆய்வுப் பிரிவின் பொறுப்புகள்’’ என்பதற்காக பொலனறுவை மாவட்டத்திற்கு ரூபா 300,000

நிதி மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்ததோடு அந்நிதியை உபயோகிப்பதற்குரிய ஆய்வு நடவடிக்கை சரியாக அறிந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2019 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்காமையினால் ஆய்வு பொறுப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பௌதீக முன்னேற்றம்**

2018 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டிற்கு ஏற்ப 54 சதவீத நிதி செயன்முன்னேற்றமும் 95 சதவீத பௌதீக முன்னேற்றத்தினையும் அடைந்துள்ளமை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும், அகழ்வு மற்றும் கல்வெட்டுப் புத்தாய்வு அனுமதிப்பத்திரப் பரிந்துரைகளை வழங்கல் அனுமதியற்ற ஆய்வு கண்காணிப்பு போன்ற நடவடிக்கைகளுக்காக நிதியை உபயோகப்படுத்தி அவற்றை ஆய்வுப் பிரிவின் நிதி முன்னேற்றமாக குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு பெற்றுக்கொண்ட பௌதீக முன்னேற்றத்தினை மேற் கூறிய நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொண்டிருந்த போதும், ஆய்வு நடவடிககைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொண்ட பௌதீக முன்னேற்றமல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

**(இ) அறிந்து கொள்ளப்பட வேண்டியிருந்த ஒப்பிட்டு நிலைமை**

பொலனறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள 07 பிரதேச செயலக அதிகாரத்திற்குட்பட்ட நிலப்பரப்பு 346,659.29 ஹெக்டெயர் ஆன போதும் தொல்பொருள் திணைக்களம் தாபிக்கப்பட்டு முடிவுற்ற 128 ஆண்டு காலப்பகுதிக்குள் அந்த பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 04 தொல்பொருள் வலயக் காரியாலய அதிகார பிரதேசத்தில் 07 பிரதேச செயலகப் பிரிவுகளில் தொல் பொருளியல் சான்றுகள் காணப்படுவதாக அறியப்பட்ட புராதன நினைவுச் சின்னங்கள் காப்பக நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் காப்பக நிலப்பரப்பின் அளவு 1,335.61 ஹெக்டெயர் மட்டுமேயாகும். அது முழு தொகையின் 0.38 சதவீதமான குறைந்த அளவாகும். 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அறியப்பட்ட தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களின் எண்ணிக்கை முறையே 73 மற்றும் 21 ஆகும்.

**(ஈ) தகவல் கட்டமைப்பின் அவசியம்**

2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய காலத்தில் அறியப்பட்ட புராதன சான்றுகள் காணப்படும் பிரதேசங்கள் தொடர்பான அறிக்கையிடலின் நிலமை பிரிவுப் பலவீனமுற்றிருப்பது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக இது வரையில் அறியப்பட்டுள்ள இடங்கள் மற்றும் பிரதேசங்கள் உள்ளிட்ட தகவல் ஒழுங்கமைப்பொன்றைத் தயாரிக்க முடியாதுள்ளது.

**(உ) ஆய்வுகளினால் வெளிப்படுத்தப்படும் அழிவுகள்**

அவ்வாறே பொலனறுவை மாவட்டத்தில் தமன்கடுவை, திம்புலாகலை, வெலிகந்த, லங்காபுரம், எலஹர – பக்கமுன பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் 2017 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்ட பிரதேச 21 பிரதேசம் மற்றும் இடங்கள் 08 இடங்களிலும் தொல்பொருளியல் நினைவுச் சின்னங்கள் மற்றும் புராதன சான்றுகளில் அழிவு மற்றும் சிறிதளவு பெறப்பட்டிருந்தமை 2017 ஆம் ஆண்டில் வெளிக்கொணரப்பட்டிருந்தது. புதையல் திருடர்களின் அனுமதியற்ற அகழ்வு, பிரதேச குடிமக்கள் அனுமதியின்றி நிலத்தினைக் கைப்பற்றல், - வகிப்போர் நினைவுச் சின்னங்கள் காரியாலயங்கள் மற்றும் சொத்துக்களை அகற்றி தமது சொந்த தேவைகளுக்கு பயன்படுத்துதல், மற்றும் பயிர்ச்செய்கை, மகாவலி அதிகார சபையினால் பயிர்ச் செய்கைக்காக நிலங்களை வழங்கல், அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்ற காரணிகள் அந்த அரும்பொருட்களின் அழிவிற்குக் காரணமாக இருந்தமை ஆய்வுகளினால் வெளிக்கொணரப்பட்டிருந்தது.

**(ஊ) கண்டறியப்பட்ட தொல்பொருள் இடங்களை வர்த்தமானியில் பிரசுரித்தல்**

2019 யூன் 30 ஆம் திகதியளவில் அரச வர்த்தமானி ஊடாக பிரசுரிக்கப்பட்டிருந்தவை பாதுகாக்கப்பட்ட மற்றும் புராதன நினைவுச் சின்னங்களள் 21 மற்றும் 03 தொல்பொருள் காப்பகமும் மட்டுமே ஆகும். பிரதேச செயலாளர் பிரிவிற்கமைய அது தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பிரதேச செயலாளர் பிரிவு | பாதுகாக்கப்பட்ட புராதன நினைவுச் சின்னம் | தொல்பொருள் காப்பகம் |
|---|---|---|
| தமன்கடுவை | 08 | 02 |
| மெதிரிகிரிய | 04 | - |
| ஹிக்குரக்கொடை | 01 | - |
| வெலிகந்தை | 04 | - |
| திம்புலாகலை | 03 | 01 |
| லங்காபுரம் | 01 | - |
| எலஹர – பக்கமுண | - | - |
| மொத்தம் | 21 | 03 |

இதற்கமைய தொல்பொருள் பாதுகாப்பு நினைவுச் சின்னம் புராதன நினைவுச் சின்னம், தொல்பொருள் காப்பகம், அரச வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தல் குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கமைய பொலனறுவை மாவட்டத்தில் 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் மட்டும் கண்டறியப்பட்ட 94 தொல்பொருள் பாதுகாப்பு நினைவுச் சின்னம், புராதன நினைவுச் சின்னம், தொல்பொருள் காப்பகம், என்பன அரச வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தமையை அவதானிக்கப்பட்டது. அந்தத் தொல்பொருளியல் இடர்கள் மற்றும் பிரதேசங்கள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கண்டறியப்பட்டிருந்த போதிலும் அதற்காக 02 வருடத்திற்கும் அதிகமான காலம் செலவிடப்பட்டிருந்தாலும் அவை பிரகடணப்படுத்தப்படாதமையினால் தொல்பொருள் நினைவுச் சின்னங்களுக்கு சேதம் ஏற்படல் மற்றும் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

### 3.2.5 அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகள்

#### (அ) தொல்பொருள் மரபுரிமைகளைக் கண்டறிதல்.

2019 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய நான்கு ஆண்டு காலத்தினுள் அம்பாறை மாவட்டத்தில் தொல்பொருள் நினைவுச் சின்னம், பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னம், தொல் பொருள் காப்பகம், மற்றும் தொல்பொருளியல் சான்றுகள் காணப்படும் இடர்கள் மற்றும் பிரதேசங்களைக் கண்டறிவதற்காக ஆய்வு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) நிதி ஒதுக்கீட்டின் பயன்பாடு

ஆய்வு பிரிவின் செயற்திட்டங்களுக்காக வருடாந்த நிதி ஒதுக்கீடு மற்றும் பயன்பாடு தொடர்பான 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் கடமைகளைப் பரீட்சிக்கையில் பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

(i) தளப்பரீட்சிப்பு மற்றும் தளபணிகளுக்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 315,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதும் அந் நிதியைப் பயன்படுத்துவதற்குத் தேவையான ஆய்வு நடவடிக்கையை கண்டறிதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. குறித்த தொகையில் ரூபா 307,109 அவ்வாண்டிற்குள் செலவிடப்பட்டிருந்த போதும் அந்த செலவானது அனுமதியற்ற ஆய்வு மற்றும் கணியப் புத்தாய்வு அனுமதிப்பத்திர வழங்குவதற்குரிய களப் பரிசோதனைக்கான போக்குவரத்துச் செலவாகே இருந்தது. ஆயினும், அந்தச் செலவு ஆய்வுப் பிரிவின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) 2019 ஆம் ஆண்டிற்காகவும் மேற்கூறியவாறு இடப் பரீட்சிப்பு மற்றும் கள நடவடிக்கைகளுக்காக ரூபா 200,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதும் செப்டெம்பர் மாதம் வரையிலும் ரூபா 60,694 மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. இந்த செலவும் அனுமதியற்ற ஆய்வுக்காகவும் கனியப் புத்தாய்வு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்குரிய களப் பரிசோதனைக்கான போக்குவரத்திற்குமே செலவிடப்பட்டிருந்தது.

(iii) 2019 ஆம் ஆண்டில் அம்பாறை பிரதேச தொல்பொருள் காரியாலயத்தினுடகாக திஸா வாவியின் குளக் கட்டுடனான ஆனையுடன் கூடிய பிரதேசம் மற்றும் நுவரகல கந்த கட்டம் – 1 ஆய்வு நடவடிக்கையை நடைமுறைப்படுத்த அனுமதிக்காக தலைமை காரியாலயத்திற்கு அனுப்பபட்ட போதிலும் அதற்கு தேவையான அங்கீகாரம் கிடைக்கப்பெறாமையால் அந்த ஆய்வு நடவடிக்கையானது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## (இ) ஆய்வுக்குரிய திட்டங்கள்

தொல் பொருள் சான்றுகள் காணப்படும் பிரதேசங்கள் மற்றும் இடங்களை ஆய்வு செய்வதினூடாக கண்டறியப்பட்டு பாதுகாத்தல், தொல்பொருள் முகாமைத்துவத்தின் பிரதானமானதும் அடிப்படைக் காரணியாகவும் உள்ளது. எனினும், போதிலும் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள 19 பிரதேச

செயலகக் காரியாலயங்கள் உள்ளிட்ட 05 தொல்பொருள் காரியாலயங்களில் காணப்படும் அப் பொருட்களைக் கண்டறிதல் மற்றும் பாதுகாத்தல் எல்லைகளைத் தீர்மானித்தல் ஆய்வு மற்றும் பேணுதல் நிச்சயிக்கப்பட்ட கால வரையயைக்குள் தொடர்ச்சியாகவும் முறையான திட்டமிடலுக்கு அமைவாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) ஆய்வுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்**

அம்பாறை மாவட்டத்தில் 2013 ஆம் ஆண்டில் விசேட ஆய்வுச் செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கு பின்வரும் அடிப்படை நோக்கங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

- தொல்பொருள் இடர்களைக் கண்டறிதல் மற்றும் அறிக்கையிடல்
- தொல்பொருள் பாதுகாப்பு / புராதன நினைவுச் சின்னங்களைப் பிரகடனப்படுத்தல்.
- தொல்பொருள் சார்பாக நிலப்பரப்பினைப் பிரகடனப்படுத்தல்
- தேவையன தொல்பொருள் இடங்களுக்கு எல்லைக் காண்கள் மற்றும் அறிவித்தல் பலகை அமைத்தல்

மேற்கூறிய நோக்கங்கள் எவ்வளவு தூரத்திற்கு சாத்தியப்பட்டுள்ளன என்பது குறித்த தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் குறித்த ஆய்வு நடவடிக்கையின் அறிக்கையின்படி பௌதீக முன்னேற்ற பரீட்சிப்பின் போது பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

i. செயற்திட்ட நடவடிக்கைகள் 06 மாத காலத்தினுள் நிறைவேற்ற இலக்காக கொண்டிருந்தது. இதற்காக ரூபா 11.81 மில்லியன் மொத்த செலவாக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் தேசிய உரிமைகள் தொடர்பான அமைச்சு ரூபா 6.67 மில்லியனும் தொல்பொருளியல் திணைக்களம் ரூபா 5.14 மில்லியனும் நிதி ஒதுக்கீடு செய்திருந்தது.

ii. செயற்திட்ட நடவடிக்கைகள் 06 மாதத்தினுள் அதாவது 2013 செப்தெம்பர் 19 ஆம் திகதியில் நிறைவுசெய்ய வேண்டிய தொல்பொருளியல் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களைக் கண்டறியும் ஆய்வு நடவடிக்கை 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கூட செயற்பட்டுக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அந் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டது எப்போது என்பது தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

iii. 2013 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்ட 40 தொல்பொருளியல் இடங்கள் பாதுகாப்பிற்காக ரூபா 1.88 மில்லியன் மொத்த செலவு மதிப்பீட்டின் கீழ் எல்லைக் கம்பங்கள் அமைப்பதற்கு 2018 அம் ஆண்டில் திட்டமிடப்பட்டு 2018 மார்ச் 31 ஆம் திகதியில் நிறைவேற்றும் இலக்கைக் கொண்டிருந்த போதிலும் அதன் நடவடிக்கைகள் இதுவரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை (இணைப்பு 01)

iv. ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட 14 பிரதேசக செயலாளர் பிரிவுகளில் 259 தொல்பொருளியல் இடங்கள் பிரகடனப்படுத்த பிரேரிக்கப்பட்ட 54 பாதுகாக்கப்பட்ட இடங்கள் மற்றும் 170 நினைவுச் சின்னங்கள் என்பன 2013 ஒக்டோபர் 17 ஆம் திகதி வரையிலும் கண்டறியப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அன்று தொடக்கம் செயற்திட்ட நடவடிக்கைகள் நிறைவேற்ற நிதி வரையிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கைகளில் கண்டறியப்பட்ட தொல்பொருள் இடர்கள், நினைவுச் சின்னங்கள், மற்றும் காப்பகங்கள் அறிக்கையிடப்படுவதற்கோ அல்லது பிரகடணப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 02)

v. இந்த ஆய்வுகளில் பிரகடனப்படுத்துவதற்கு பிரேரிக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட நிலப்பரப்பில் அம்பாறை மாவட்டத்தில் 2019 ஆம் ஆண்டு வரையிலும் பாதுகாப்பு நிலப்பரப்பாக வர்த்தமானியில் பிரேரிக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை 02 ஆகும். அந்த இடங்களாக முஹுது மஹா விகாரை மற்றும் நுவரகல காப்பகம் கண்டறியப்பட்டிருந்த போதிலும் அவற்றின் எல்லைச் சிக்கல்கள் தற்போது வரையிலும் தீர்க்கப்படாது காணப்படுகின்றது. முஹுது மகா விகாரைக்குரிய பாதுகாக்கப்பட்ட நிலப்பரப்பானது 2002 ஆம் ஆண்டில் இருந்த பிரதேச செயலாளரினால் மக்களுக்கு அனுமதிப்பத்திரம் மூலம் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. மேலும், காணி பகிர்ந்தளிப்பதன் மூலம் தொல் பொருள் கட்டளைச் சட்டத்தினை மீறல் இடம்பெற்றுள்ளது.

**(உ) வனசீவராசிகளின் வலயங்களில் ஆய்வு நடவடிக்கைகள்**

அம்பாறை மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வு நடவடிக்கைகளில் அப் பிரிவுகளில் காணப்படும் வனவிலங்கு வலயங்களில் ஆய்வு நடவடிக்கைகள்

மேற்கொள்ள முடியாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. வனவிலங்கு திணைக்களத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமையும் அத் திணைக்களத்தில் ஆய்வு நடவடிக்கைகளில் பங்களிப்பு வழங்கும் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்காமையும் வனவிலங்கு வலயங்களில் ஆய்வு நடவடிக்கைகள் கைவிடப்படக் காரணமாக உள்ளன. வனவிலங்கு வலயங்களில் அமைந்துள்ள தொல்பொருள் இடங்கள் தொடர்பில் திட்டங்களுடன் வனவிலங்குத் திணைக்களத்துடன் உகந்த தொடர்பு காணப்படாமையும், அதற்காக ஆய்வு பிரிவின் பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டன.

**(ஊ) தொல்பொருள் இடங்களைப் பேணுதல்**

14 பிரதேச செயலாளர் பிரிவுகளுள் 08 பிரிவுகளில் கல்வெட்டுடன் கூடிய தொல்பொருள் இடங்கள் 47 கண்டறியப்பட்டு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், கல்வெட்டின் பிரதியினை பேணுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டத (இணைப்பு 03)

**(எ) தொல்பொருள் இடங்களைக் இனங்காணுவதற்கான பெயர்ப்பலகை தயாரித்தல்**

அம்பாறை மாவட்டச் செயலகத்தின் ஊடாக மாவட்டத்தின் புராதனமான இடங்களுக்குப் புதிய பெறுமதியை வழங்கி சுற்றுலாத் தொழிற்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில், அந்த இடங்களை இலகுவில் அறிந்து கொள்ளக்கூடிய வகையில் பெயர்ப் பலகைகளை அமைப்பதற்கு தொல்பொருளியல் இடங்களின் விபரங்கள் அம்பாறை மாவட்டச் செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சின் செயலாளரினால் இலக்கம் NH/4/14/OR கொண்ட 2013 செப்டெம்பர் 20 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கு பின்னூட்டல் அளிக்கப்பட்டதாக அவதானிக்கப்படவில்லை. இதன் காரணமாக அம்பாறை மாவட்டச் செயலாளர் ஊடாக தொல்பொருள் இடங்களில் பெயர்ப்பலகையை நிறுவும் பணியும் நிறுத்தப்பட்டிருந்தது.

### 3.2.6 மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாத்தல்.

மனித செயற்பாடுகளினால் கிழக்கு மாகாணத்தில் பல தொல்பொருள் இடங்கள் சேதமாக்கப்பட்டு உள்ளமையினால் அந்தத் தொல்பொருளியல் இடங்கள் மற்றும்

அப்பொருட்களை பாதுகாத்தல் தொடர்பில் 2016 திசெம்பர் 22 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டிருந்த கட்டளைக்கமைய கிழக்கு மாகாணத்தினுள் உள்ள தொல்பொருளியல் இடர்களைக் கண்டறிதலும் ஆவணப்படுத்தலும் கண்டறியப்பட்ட இடங்களின் பூகோள மற்றும் இடத்தின் தரவுகளை உள்ளடக்கிய செயல்பாட்டினைத் தயாரித்தல், பெயர்ப் பலகை அமைத்தல், அளவீட்டு நடவடிக்கையெடுத்தல், காப்பகம் அல்லது நினைவுச் சின்னமாக வர்த்தமானியுனூடாகப் பிரகடணப்படுத்தல் என்பவற்றிற்கு முன்னுரிமை கவனம் செலுத்தி குறித்த தினத்தில் நடவடிக்கை நிறைவேற்றுமாறு கல்வி மற்றும் கலாசார அமைச்சின் செயலாளரினால் 2016 திசெம்பர் 23 ஆம் திகதி ED/10/NH/09/84 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வருபவன அவதானிக்கப்பட்டிருந்தன.

**(அ) கண்டறியப்பட்ட பிரதேசங்களை பிரகடனப்பத்தும் செயற்பாட்டிற்குரிய நிதி ஒதுக்கீடு**

இதற்கமைய தொல்பொருள் இடர்களைக் கண்டறிதல் மற்றும் அறிக்கையினூடாக உடனடியாக ஆய்வுகளை மேற்கொள்ளல் கண்டறியப்பட்ட அனைத்து தொல்பொருள் இடங்களுக்கு எல்லைக் கம்பங்கள் மற்றும் அறிவித்தல் பலகை அமைத்தல், கண்டறியப்பட்ட இடங்களை காப்பகம் அல்லது நினைவுச் சின்னமாக பிரகடணப்படுத்தல், போன்ற செயற்பாடுகளுக்கு செயற்திட்ட முன்மொழிவுகள் மற்றும் ரூபா 7 மில்லியனுக்கான மொத்த செலவு மதிப்பீட்டை அமைச்சின் செயலாளரின் அனுமதிக்காக தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தினால் 2016 திசெம்பர் 26 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த மொத்த செலவு மதிப்பீட்டிற்கு மேலதிகமாக மத்திய கலாச்சார நிதியத்திலிருந்து செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்து கொள்வதற்காக ரூபா 29.27 மில்லியன் தொகைக்கான பௌதீக மொத்த செலவு மதிப்பீடு 2017 பெப்ரவரி 07 ஆம் திகதி அனுமதியளிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய செயற்திட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மொத்தமாக ரூபா 36.27 மில்லியன் நிதி ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) கண்டறியப்படாத பிரதேசங்களில் ஆய்வு நடவடிக்கை**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் 04 ஆய்வுக் குழுவினரும் திருகோணமலை மாவட்டத்தில் தம்பலாகமம் மற்றும் சேருதுவர ஆகிய 02 பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதுவரையில் ஆய்வு

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொல்பொருள் இடங்கள் கண்டறியப்பட்டு. அறிக்கையிடப்பட்டுள்ளதோடு மிகுதியாகவுள்ள 09 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 02 ஆய்வு குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**(இ) ஆய்வு அறிக்கைகளைத் தயாரித்தல்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆய்வு நடவடிக்கைகள் 2017 மார்ச் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 ஓகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு, ஆய்வு அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்திருந்தது. 2019 ஒக்டோபர் 28 ஆம் திகதியில் ஆகும். ஆய்வு செயற்திட்ட பொறுப்பதிகாரியை இடமாற்றம் செய்தமை மற்றும் அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைக்காகப் பிரதான காரியாலயத்தின் ஆய்வுப் பிரிவிலுள்ள உத்தியோகத்தர்கள் போதியளவு ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு வழங்காமை அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெறப்பட்ட காலத்திற்கு காரணமாக இருந்துள்ளது இதற்கமைய அறிவதாவது ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகையில் ஆய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட்டிருக்காமை ஆகும்.

**(ஈ) அசையும் அரும்பொருட்களைப் பேணுதலைக் துரிதப்படுத்தல்**

எவ்வாறெனினும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேசச் செயலாளர் பிரிவுகள் 528 தொல்பொருள் இடங்கள் மற்றும் 120 அசையும் அரும் பொருட்களுடன் கூடிய இடங்களுக்கென மொத்தமாக 648 தொல் பொருளியல் பிரதேசங்கள் கண்டறியப்பட்டிருந்தன. கண்டறியப்பட்டிருந்த தொல்பொருள் இடங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் அசையும் அரும் பொருட்களைத் துரிதமாகப் பேணப்பட வேண்டி இருந்த போதிலும் அதற்காக எந்தவொரு வேலைத்திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலாகக் காணப்படும் அரும் பொருட்கள் தற்கால மனித செயற்பாடுகளை உருக்குலைத்தல் இடம் பெயர்தல் மற்றும் அழிவடைதலுக்கு உள்ளாகிக் காணப்படுகின்றன.

**(உ) இனங்காணப்பட்ட தொல் பொருட்களின் விபரங்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்**

திருகோணமலை மாவட்டத்தில் 09 பிரதேச செயலாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்ட தொல் பொருள் இடங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் அசையும் அரும்பொருட்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்பபிக்கப்படாததோடு குறித்த ஆய்வு

அறிக்கையையும் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) ஆய்வுப் பிரிவின் நடவடிக்கைகளை முகாமைத்துவப்படுத்தல்**

ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 02 வருடங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்த போதும், ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக ஆய்வுப் பிரிவு கவனம் செலுத்தியிருக்காததுடன், தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்கமைய ஆய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்களினால் ஆய்வு நடவடிக்கைகளை முகாமைப்படுத்தலுக்கு போதியளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்காமையும், அது முகாமைத்துவத்தின் வினைத்திறனற்ற தன்மை எனவும் அவதானிக்க கூடியதாக உள்ளது.

**(எ) ஆவணப்படுத்தலுக்கான செயற்திட்டம்**

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தொல்பொருள் இடங்களை ஆவணப்படுத்தும் செயற்திட்டமானது 2017 ஆம் ஆண்டில் செயற்திட்டத்திற்கமைய 06 மாதத்திற்குள் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொல்பொருள் இடர்கள் கண்டறியப்பட்ட பின்னர் ஆவணப்படுத்தல், புவியியல் மற்றும் இடர்தரவுப் பெயரில் பட்டியினைத் தயாரித்தல், கண்டறியப்பட்ட இடங்களில் தொல்பொருள் பெயர்ப் பலகைகளை அமைத்தலும் அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அளவிடப்பட்ட இடங்கள் தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் அல்லது காப்பகமாக வர்த்தமானியினூடாகப் பிரகடனப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும் செயற்திட்ட காலம் முடிவுற்று 02 வருட காலத்தின் பின்னரும் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அல்லது நடவடிக்கை அரும்பிப்பதற்கான ஆயத்தம் அல்லது அதற்கான வேலைத்திட்டம் எதுவுமே காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

**(ஏ) மேன்மைதகு ஜனாதிபதி அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லல்**

இதற்கமைய தொல்பொருளியல் இடங்கள் மறறும் அரும்பொருட்களைப் பாதுகாத்தல் தொடர்பில் 2016 ஆம் அண்டில் ஜனாதிபதி அவர்களால் வழங்கப்பட்ட கட்டளைக்கமைய முதன்மை கவனத்தைச் செலுத்தி உடனடியாக அவற்றை நிறைவேற்றும் பொறுப்பை புறக்கணித்திருந்தமையும் இது தொடர்பில் உரிய கவனமெடுக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

அவ்வாறே, இச் செயற்திட்டத்தின் இலக்காகக் கொள்ளப்பட்டட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தவறியிருந்ததோடு நடைமுறைப்படுத்துவதில் நீண்ட காலதாமதம் காணப்பட்ட காரணத்தால் கிழக்கு மாகாண தொல்பொருள் இடங்கள் மற்றும் அரும்பொருட்களை பாதுகாத்தல் தொடர்பில் ஜனாதிபதியின் நோக்கம் தோல்வியடைந்திருந்தது.

**(ஐ) ஏனைய அரச நிறுவனங்களின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்கள்**

திருகோணமலை மாவட்டத்தினுள் பாதுகாப்பற்ற முறையில் காணப்படும் பல தொல்பொருள் இடங்களின் மேலதிகப் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு ஒழுங்கு முறைகள் செய்யும் அடிப்படை எண்ணத்தின்படி 2016 ஆம் ஆண்டில் சேருநுவர பிரதேசம் செயலாளர் பிரிவில் உள்ள தொல்பொருள் இடங்களை கண்டறியும் ஆய்வு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. தற்காலத்தில் சேருவிலை, சுமேதங்கரபுர, காவந்திஸ்ஸபுர, மகிந்தபுர, சேருநுவர, மகாவலிகம, சோமபுர, லங்காபுரம், சிவபுரம், தெவித்த, நீகபொல, சமகிரம், நாவற்கேண்காடு, தங்கநகர் மற்றும் சிரிமங்கலபுர, ஆகிய 16 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் பிரித்தளிக்கப்பட்டுள்ளது. சேருதுநுவர பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் குடியேற்றங்கள் செய்யப்பட்டுள்ளது அந்த பிரதேசத்தின் அரைவாசிக்கும் குறைவான பிரதேசம் என்பதுடன் அதிக நிலப்பரப்பு சரணாலயம், தேசிய பூங்கா மற்றும் வனவிலங்கு மற்றும் வனப்பு பேணல் நிலப்பரப்பில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**(ஐ) இனங்காணப்பட்ட தொல்பொருள் இடங்கள் மற்றும் அசையும் அரும் பொருட்கள்**

திருகோணமலை மாவட்டத்தில் சேதுநுவர பிரதேச செயலாளர் பிரிவில் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையில் 58 தொல்பொருள் இடங்களில் உள்ள நினைவுச் சின்னங்கள் மற்றும் அசையும் அரும்பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன. (இணைப்பு 04)

திருகோணமலை மாவட்டத்தில் சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவில் கண்டறியப்பட்ட தொல் பொருள் இடங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் அசையும் அரும்பொருட்களுள் புதிதாக கண்டறியப்பட்ட மற்றும் உருக்குலையும் அல்லது இடம் பெயரும் அல்லது அழிவடையும் ஆபத்துக்களை மற்றும் கண்டறியப்பட்ட சந்தர்ப்பத்தில் தொல்பொருளியல் மரபுரிமையை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 03 ஆண்டுகளுக்கு

மேற்பட்டிருந்தும் அவற்றைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஒ) இனங்காணப்பட்ட இடங்கள் அழிவுக்குட்படல்**

இதன் காரணமாகப் புதையல் தேடும் நோக்கில் அனுமதியற்ற ஆய்வு மேற்கொள்ளல், காணிகளை அனுமதியின்றி கைப்படுத்தல், வீடுகளை அமைத்தல், மற்றும் பயிர்செய்கை மேற்கொள்ளல், அரசின் அபிவிருத்திச் செயற்திட்டங்களை மேற்கொள்ளல், கனிய மற்றும் கல்வெட்டு அகழ்தல் போன்ற மனித நடவடிக்கைகள் ஒழுங்காற்று முறையில் இடம்பெறுவதனால் தொல்பொருளியல் மரபுரிமைகள் அழிவடைந்து காணப்படுகின்றது. (இணைப்பு 05)

## 3.3 தொல்பொருளியல் அகழ்வு பணிகள்

தொல்பொருளியல் நினைவுச்சின்னங்கள், தளங்கள் மற்றும் புவியியல் அமைவுகள் மற்றும் அரும் பொருட்களின் பாதுகாப்பிற்காக தொல்பொருளியல் நினைவுச் சின்னங்களை அடிப்படையாக கொள்வதை தெளிவுபடுத்திக்கொள்ளல் மற்றும் தோண்டி எடுத்தல் அகழ்வுகளை மேற்கொள்வதன் பிரதான நோக்கம் ஆகும். அதற்கு மேலதிகமாக பிராக் தொன்மையான, முன் புராதன, ஆரம்ப புராதன ஆகிய வகையில் நிலவும் டிதால்பொருளியல் துறையில் நிலவும் ஆராய்ச்சி பிரச்சினைகள் ஆகியவற்றை தீர்த்துகொள்ளும் நோக்கில் ஆராய்ச்சி அகழ்வுகள் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் அல்லது ஏனைய காரணமாக அமைந்த தொல் பொருளியல் பெறுமதியான நில பரப்பிற்குத் தாக்கத்தினை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களில் நிலப்பரப்பினை புரிந்து கொள்ளல், தொல் பொருள் நினைவுச் சின்னங்களைக் காப்பாற்றுதல், மற்றும் அறிக்கையிடல் நோக்கங்களுடன் சேதங்களின் தாக்க மதிப்பீட்டாய்வு போன்ற ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டது. இவ்வகழ்வு நடவடிக்கை செயற்படுத்துவது தொடர்பில் வடக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் மாதிரி பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட பல்வேறு பிரதேசங்கள் அடிப்படையில் அவதானிக்கப்பட்ட காரணிகள் பின்வருமாறு ஆகும்.

### 3.3.1 அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் அகழ்வு நடவடிக்கை

**(அ) அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல்**

மத்திய கலாசார நிதியத்தில் பேராசிரியர் ஒருவருக்கு 2017 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அகழ்வு

அனுமதிப் பத்திரக் காலம் உள்ளடக்கப்பட்ட 35 செயற்திட்டங்களுக்கான ஆய்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அகழ்வுக்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்கையில் வழங்கப்பட்ட அகழ்வு அனுமதிப் பத்திரங்களின் முன்னேற்றத்தினை பரீட்சித்தல் மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) அகழ்வுக்கான அனுமதிப் பத்திரங்களின் முன்கொண்டுவரல்**

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதத் வரையான காலப்பகுதியினுள் வழங்கப்பட்ட அகழ்வுக்கான அனுமதிப்பத்திரங்கள், வழங்கப்பட்ட திகதிக்கு முன்னைய தினம் தொடக்கம் செயற்படுத்தப்படும் வழியாக முற்கொணரப்பட்ட 34 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. (இணைப்பு 06)

**(இ) வெளி நபர்களினால் மேற்கொள்ளப்படும் அகழ்வுகள்**

அகழ்வு தரவுகள் உள்ளிட்ட அறிக்கையில் காணப்படும் தகவல்களின் படி வெளி நபர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த அகழ்வானது ஆய்வுக்கான அகழ்வு அல்லது தாக்க மதிப்பீட்டு அகழ்வு உள்ளதுடன் அதன் மூலம் புராதன நினைவுச் சின்னம், இடங்களை வெளிப்படுத்த பேணும் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அற்றுப் போவது அவதானிக்கப்பட்டது.

**(ஈ) அகழ்வுகளின் போது கிடைக்கப் பெறும் அருப்பொருட்களை ஆவணப்படுத்தல்**

1940 இன் 9 ஆம் இலக்க அப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஒழுங்குகளுக்கமைய அகழ்வினை மேற்கொண்டு கொள்கையில் கண்டு பிடிக்கப்படும் அனைத்து அப்பொருட்கள் தொடர்பான அறிக்கையினை பேணுதல், கண்டு பிடிக்கப்பட்ட அப் பொருட்கள் தொடர்பாக தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திடம் அறிக்கையிடல் மற்றும் கையளித்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலும் மேற்கொள்ளப்பட்ட 121 அகழ்வு செயற்திட்டங்களுக்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்ட இருபது வெளி நபர்களினால் அதற்கு மாறாக அகழ்வு நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். அந்த நிலைமையை 2019 ஜூன் 30 ஆம் திதகி வரையிலும் சீர்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (இணைப்பு 07)

### 3.3.2 பொலன்னறுவை மாவட்டத்தில் அகழ்வு நடவடிக்கைகள்

#### (அ) அகழ்வுகளின் விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்

பொலன்னறுவை மாவட்டத்திற்காக வேறாக பிரதேச அலுவலகமொன்றை 2016 ஆம் ஆண்டு தாபித்திருந்ததோடு 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய காலங்களில் அநுராதபுரம் வடமத்திய பிரதேச அலுவலகத்தினூடாக நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன. இதன் காரணமாக 2016 ஆம் ஆண்டிற்கு முந்தைய காலங்களுக்குரிய அகழ்வு தொடர்பான விரிவான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு முடியாதுள்ளமையாக குறித்த உத்தியோகத்தர் கணக்காய்விற்கு காரணங்களைத் தெரிவித்துள்ளார்.

#### (ஆ) நிதி ஒதுக்கீடு மற்றும் பௌதீக முன்னேற்றம்

பொலன்னறுவைப் பிரதேச அலுவலகத்தினூடாக அவ்வதிகாரப் பிரதேசத்தினுள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் திகதி வரையிலுமான 03 ஆண்டு 06 மாத காலப்பகுதியினுள் மிகக் குறைந்தளவான 04 அகழ்வு செயற்திட்டங்களே செயற்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு அகழ்வு மற்றும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் 04 அகழ்வுச் செயற்திட்டங்களுக்காக மட்டும் ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 9,489,010 ஆகும். விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

| அகழ்வுச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | அகழ்வுச் செயற்திட்டம் தொடர்பான விபரங்கள் | நிதி வழங்கிய நிறுவனம் | மதிப்பிடப்பட்ட நிதியை ஒதுக்கீடு செய்தல் |
|---|---|---|---|
| | | | ரூபா. |
| 2016 | வெலிவதுர ரஜமகா விகாரை தொல்பொருள் இடம் (சிலை வைக்கப்படும் அறை) | தொல்பொருள் திணைக்களம் | (நிதி பெறுமானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை) |

| | | | |
|---|---|---|---|
| 2018 | 28 ஆம் கல் தொல்பொருள் இடம் (02 புத்த பிரதிமகள் தாதுகோபங்கள்) வைத்திய மற்றும் பண்பாட்டு அணை) | தொல்பொருள் திணைக்களம் | 4,143,820 |
| 2018 | நாகலகந்த தொல் பொருள் இடத்தின் தூபியின் 1 ஆவது கட்டம் | புத்தசாசன அமைச்சு | 2,000,000 |
| 2019 | நாகலகந்த தொல்பொருள் இடத்தின் தூபியின் 2 ஆம் கட்டம் | தொல்பொருள் திணைக்களம் | 3,208,790 |
| 2019 | அந்துமல்பிட்டிய தொல்பொருள் இடத்தின் தாமரைக் குளம் இலக்கம் 03 | மத்திய கலாசார நிதியம் | 136,400 |
| | | | ------------- |
| | | | 9,489,010 |
| | | | ====== |

இவ்வகழ்வுச் செயற்திட்டங்களுடன் நாகலகந்த தொல்பொருள் இடத்தின் தூபி அகழ்வு நடவடிக்கை முற்றுப் பெறாது இருந்ததுடன் 2019 ஜூன் 30 ஆம் திகதியில் செயற்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது.

**(இ) கண்டறியப்பட்ட அனைத்து இடங்களையும் அகழ்தல்**

அவ்வாறே 2016 ஆம் ஆண்டிலும் 2017 ஆம் ஆண்டிலும் ஆராய்ச்சிகளில் கண்டறியப்பட்ட தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் மற்றும் இடங்கள் 94 இன் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கவனமெடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் மற்றும் இடங்களுக்குப் புதையல் எடுப்போர் மனித நடத்தைகள் மற்றும் அதன் அபிவிருத்தி செயற்திட்டங்கள் போன்றவற்றின் அடிப்படையில் தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த நிலப்பரப்பிற்கு ஏற்படும் தாக்கங்களின் அப் பொருட்கள் மற்ற் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்க முடியாதுள்ளது. அகழ்வுகள் மூலம் தொல்பொளியல் நினைவுச் சின்னங்கள்

இடங்கள், புதையல் மேற்பரப்பினை வெளிப்படுத்தி அறிக்கையிடுவதற்கும தாக்கங்களின் அடிப்படையில் ஏற்படும் நொக்கங்களிலிந்து அரும்பொருட்கள் நினைவுச் சின்னங்களை காப்பாற்றுவதற்கென சந்தர்ப்பம் ஏற்படுமென்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**(ஈ) தொல்பொருள் மரபுரிமைகளை வெளிப்படுத்தல்**

மேலும் பொலநறுவை மாவட்டம் முழுவதிலும் பரந்து காணப்படும் தற்போது கண்டறியப்பட வேண்டிய அல்லது நடவடிக்கை எடுக்கப்படாத தொல்பொருளியல் பெறுமதி வருடாந்த பிரதேசம், இடர்கள் மற்றும் தொல் பொருளியல் நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல் மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளை வெளிப்படுத்துவதற்கு எவ்விதமான திட்டமும் இல்லாததுடன் அதற்காக மத்திய கலாச்சார நிதியத்தின் பங்களிப்பினை பெற்றுக்கொண்டு குறித்த செயற்பாட்டினைச் சிறப்பாக முகாமைத்துவப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) பாதுகாக்கப்படாத தொல்பொருள் இடங்கள்**

ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்கள் இல்லாத காரணத்தினால் 2016 ஆம் ஆண்டு மற்றும் 2019 ஜுன் 30 ஆம் திகதிய காலத்தினுள் மத்திய கலாச்சார நிதியத்தின் தற்றுணிவில் ஆலாஹன பிரிவேன செயற்திட்டத்தின் மூலம் தற்போது தொல் பொருள் இடங்கள், நினைவுச் சின்னங்கள் பாதுகாக்கப்படும். மேலும், 14 தொல்பொருள் இடங்களில் அகழ்வுச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆயினும், தற்போது பாதுகாக்கப்படாத தொல்பொருள் இடங்கள், புராதன நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக மத்திய கலாசார நிதியத்தின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைக்குள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3.3 அம்பாறை மாவட்டத்தில் அழிவு நடவடிக்கைகளின் செயலாற்றுகை மட்டம்

அம்பாறைப் பிரதேசச் செயலாளர் அலுவலகத்தினூடாக அம்பாறை மாவட்டத்தினுள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஒக்டோபர் 24 ஆம் திகதி வரையான 03 வருட 09 மாத காலத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது கொத்மலை புராதண விகாரை (சிறிய சீகிரியா) அகழ்வு மட்டமேயாகும். அதன் போது 2016 ஆம் ஆண்டின் புராதன தாதுகோபுர அகழ்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தூபியின் மேல்தள அகழ்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதில்

புராதன தாதுகோபுர அகழ்விற்காக ரூபா 69,644 மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் ரூபா 42,832 செலவிடப்பட்டிருந்தது. இரண்டாவது சட்டத்தின் கீழ் தூபியின் மேல் தள அகழ்வுக்காக ரூபா 626,925 மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டு ரூபா 16,500 தொகை மததிய கலாசார நிதியத்தின் நிதியின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.

கொத்மலை புராண விகாரையின் (சிறிய சிகிரியா)) செயலாற்றும் பின்புலம் பரீட்சிப்பில் அநுராதபுரக் காலத்திற்குரியதானதாக கருதக்கூடிய தொல்பொருளியல் சான்றுகளுடன் கூடிய தொல்பொருளியல் இடமான அதில் 04 கல்வெட்டு சாசனங்கள், குகை ஓவியங்கள், கற்றூண்கள், மாடிப்படிகள், புராதன குளங்கள் போன்றவற்றுடன் கூடிய தொல்பொருள் பெறுமதியுடன் காணப்படும் இடங்களாக அறிக்கையிடப்பட்டுள்ளன.

### 3.3.4 மட்டக்களப்பு மாவட்டத்தின் அகழ்வு நடவடிக்கைகள்

#### (அ) அகழ்வு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல்

அம்பாறை பிரதேச தொல்பொருள் அலுவலகத்தினூடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 செப்தெம்பர் மாதம் வரையிலும் கண்டறியப்பட்ட 52 இடர்களில் 03 செற்திட்டங்களின் கீழ் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறிருந்தன. அதற்கமைய 03 செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 3,184,315 ஆக உள்ளதுடன் அவற்றில் எதற்குமே இறுதி அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறு ஆகும்.

| | செயற்திட்டத்தின் பெயர் | அகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | மதிப்பிடப்பட்ட தொகை | செலவினம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| i. | கரடியனாறு தாகபையின் சலபதல மண்டபத்தின் அகழ்வுகள் | 2017 | 2120,500 | 1,564,494 |
| ii. | கரடியனாறு புராதன எச்சங்களுடனான நிலப்பரப்பின் அகழ்வுகள் | 2018 | 1,535,802 | 1,145,998 |

| | | | | |
|---|---|---|---|---|
| iii. | கோவில் குளம் வீடமைப்பு தொகுதியின் நிலப்பிரதேசத்தின் ஆராய்தல் மற்றும் அகழ்வுகள் | 2019 | 500,000 | 473,823 |
| | | | | ------------- |
| | | | | 3,184,315 |

மட்டக்களப்பு மாவட்டத்தினுள் மேற்கூறிய அகழ்வுகளைத் தவிர வேறு அகழ்வு நடவடிக்கைகள் இது வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு குறித்த அகழ்வு தொடர்பில் பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

**(ஆ) கரடியனாறு அகழ்வு நடவடிக்கைகள்**

i. அகழ்வு நடவடிக்கைகளின் முதலாவது கட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் பரீட்சிப்பு நடாத்தப்பட்டு ஆரம்ப அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அதற்கமைய 17 அகழ்வுச் சுற்றுக்களின் கீழ் அகழ்வு மேற்கொள்ளப்ப்டிருந்ததோடு அதில் அகழ்வு மற்றும் பேணல் ஆகிய நடவடிக்கைக்காகவும் ரூபா 2,120,500 தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதும் தாதுகோபுர மாட அகழ்வுக்காக மட்டும் ரூபா 1,564,494 நிதி செலவிடப்பட்டிருந்தது. அந்த அகழ்விற்கு உரிய பேணுதல் நடவடிக்கை இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ii. மேற்கூறிய அகழ்வுகளில் கிடைக்கப் பெற்ற அரும்பொருட்கள், பட்டியலின்படி, அம்பாறை பிரதேச அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய பிரதேச அலுவலகத்தினூடாக தொல்பொருள் தலைமை அலுவலகத்தின் நூதனசாலை பிரிவிற்கு அவற்றை வகைப்படுத்தி ஆவணப்படுத்த அறிவிக்கப்பட்டிருந்த போதும் 2019 செப்தம்பர் மாதம் வரையிலும் வகைப்படுத்தி ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டது.

iii. கரடியனாறு புராதன இடிபாடுகளுடன் கூடிய அழிவுக்குட்பட்டுள்ள நிலப்பரப்பின் அகழ்வு நடவடிக்கைகள் 2018 ஒக்டோபர் 27 ஆரம்பிக்கப்பட்டு 2018 நவம்பர் 30 ஆம் திகதியில் முடிவுறுத்தப்பட்டுள்ளது. அந்த அகழ்விற்கு உரியதான அகழ்வு அறிக்கை வழங்கப்பட்டிருக்காததுடன், அவ்வகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட அப்பொருட்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

iv. தொல்பொருள் இடமாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாத இந்த தொல்பொருள் நிலப்பரப்பிற் ஊடாக கரடியனாறு அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்கு யோசனை வைக்கப்பட்டுள்ளதோடு அந்த நிலைமயின் கீழ் நிகழத்தக்க அரும்பொருள் சேதமடைதல் போன்றே தொல்பொருள் நிலப்பரப்பிற்கும் ஏற்படக் கூடிய தாக்கம் தொடர்பில் அகழ்வு உத்தியோகத்தர்களினால் பிரதேச அலுவலகத்திற்கும் அறியப்படுத்தியதன் குறிப்பிட்டுள்ள போதிலும் அது தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்தின் பொறுப்புக் கூறியவர்களின் தலையீடு ஏற்படாததனால் அந்த தொல்பொருள் இடங்கள் அழிவடைவதற்கான அபாயம் காணப்படுகின்றது.

v. கரடியனாறு தொல்பொருள் இடத்தின் நடவடிக்கைகளுக்காக மத்திய கலாசார நிதியத்தினூடான 2019 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் பதவியணிக்கு எட்டுப்பேர் நியமிக்கப்பட்டிருப்பினும் தமிழ் மக்கள் வாழும் அந்தப் பிரதேசங்களில் தங்குமிடம், போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய அசௌகரியங்களினால் அவர்கள் அனைவரும் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளனர். அவ்வாறான நிலைமையின் கீழ் இந்தத் தொல்பொருள் நிலப்பரப்பு மற்றும் காணப்படும் அப்பொருட்களைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பில் நிறைந்த நிலைமை உருவாகியுள்ளது.

**(இ) கோவிக்குளம் அகழ்வு நடவடிக்கை மற்றும் அதன் முக்கியத்துவத்திற்கமைய தேவையான நடவடிக்கை எடுத்தல்.**

கி.மு 370 இல் கட்டப்பட்ட அழகிய கோவிலாகும். அதன் அருகில் குளமொன்று இருப்பதனால் இந்த இடம் கோவிற்குளம் என அழைக்கப்பட்டதுடன் போர்த்துக்கேயரின் ஆட்சியில் 1627 ஆம் ஆண்டில் இக் கோயிலினை இடித்து கோவிலின் கற்றூன்களை வேறு இடத்திற்கு கொண்டு சென்றிருந்தனர். 1980 ஆம் ஆண்டு தென்னை மரங்களை நடும் நோக்கில் குழிகளை வெட்டும் போது சிறிய சிவலிங்கம் ஐந்து தலை நாகத்தின் கீழ் அமைந்துள்ள புத்தர் சிலை உள்ளிட்ட அரும் பொருட்கள் பாரியளவில் கிடைத்துள்ளன.

i. காத்தான்குடி முஸ்லீம் பள்ளிவாசல் மாவட்டங்களுக்குரிய அந்த காணியை 2014 ஜுன் மாதம் 24 ஆம் திகதி 31 காணித் துண்டுகளாக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு முஸ்லீம் மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2014 செப்டெம்பர் 20 ஆம் திகதி கணக்காய்வுப் பரீட்சிப்பினை நடாத்தும் சந்தர்ப்பத்தில் 17 நிலையான கட்டிடங்களும் மற்றம் அகழ்வுகளின் பின்னர் 2019 ஆம் ஆண்டு கண்கக்காய்வு பரீட்சிப்பு நடாத்தப்பட்டு அண்மித்த மதங்களில் 10 தற்காலிகக் கட்டங்கள் எடுக்கப்பட்டிருந்தன. அகழ்வு

மேற்கொள்ளப்பட்டிருந்த 16,13,17 மற்றும் 20 ஆம் இலக்க காணித் துண்டுகள் மட்டுமே தொல்பொருள் திணைக்களத்திற்கு மீதியாக இருந்தது. எனினும், 16 காணித் துண்டுகளிலும் அசையும் மற்றும் அசையா அரும்பொருட்கள் காணப்படுவது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ii. கோயில்குளம் அகழ்வு அறிக்கையின் படி 2019 ஆம் ஆண்டு மார்ச் 05 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 24 ஆம் திகதி வரையிலும் அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்து. இங்கு 14 காணித்து துண்டுகளில் தற்காலிக நிர்மாணிப்பு காணப்பட்டு மீதி காணித்துண்டுகளில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட இடங்களில் அகழ்வுகளை மேற்கொண்டு சந்திர வட்டக்கல், பழைய கருங்கற் அத்திவாரக் கற்கள் உள்ளிட்டட பெருந்தொகையான அரும்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்ததேனினும், அவற்றைக் பேணுவதற்கோ அல்லது அகழ்வுகளில் கண்டறியப்பட்ட அரும்பொருட்களுக்குப் பொருத்தமான பாதுகாப்பு முறைமைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

iii. அகழ்வுகளின் மூலம் வெளிப்பட்டுள்ள அரும்பொருட்கள் வெளியே தெரியதாவாறு தற்காலிகமாக மண்ணினால் மூடப்பட்டிருந்ததோடு அகழ்வு இடம்பெற்ற முழு நிலப்பரப்பையும் திட்டத்திற் குறிப்பிடப்பட்டிருந்த 16 காணித் துண்டுகளையும் குறித்தொதுக்குவதற்கும், அகழ்வு மேற்கொள்ளப்பட்ட பிரதேசத்துடன் இணைந்துள்ள ஏனைய காணிகள் மற்றும் குளம் அமைந்துள்ள பிரதேசத்தில் மேலும் அகழ்வினை மேற்கொள்ளவும் 01,02,03 காணித் துண்டும் பிரதேசங்களின் எண்களை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் தொல்பொருள் காவலிடல், சிவில் பாதுகாப்பு மற்றும் பொலிஸ் காவளிடல் பிரேரிக்கப்ட்டிருப்பதும் அந்த நடவடிக்கைகள் கணக்காய்வு பரீட்சிப்பு இடம் பெற்ற தினம் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அகழ்வுக்கான இடங்களை அறிந்து கொள்ளல்**

2016 ஆம் ஆண்டு தொடக்கம் அது வரையிலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அகழ்வு நடவடிக்கைகள் 03 செயற்திட்டங்களுக்கு மட்டுப்படத்தப்பட்டு இருந்ததுடன் அந்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் அகழ்வு நடவடிக்கைகளை வினைத்திறனானதாக செயற்படுத்த திட்டமிடப்பட்ட செயன்முறையொன்று தொல்பொருள் திணைக்களத்திடம் இல்லாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அந்த நிலமையின் கீழ் இரு மாவட்டங்களில்

கண்டறியப்பட்டிருந்த 726 தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் மற்றும் இடங்களுள் அகழ்வு நடவடிக்கை ஏற்பட வேண்டிய இடம் எது என்பதை அறிந்து ஆய்வு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான நிலைமையில் தொல்பொருள் நினைவுச் சின்னம் மற்றும் இடங்களில் புதையல் தேடுவோர் மனித நடவடிக்கை மற்றும் அரச அபிவிருத்திச் செயற்திட்டங்கள் போன்றவற்றின் அடிப்படையில் தொல்பொருள் பெறுமதி வாய்ந்த நிலப்பிரதேசங்களுக்கு ஏற்படும் தாக்கங்களிலிருந்து அரும் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை பாதுகாத்துக்கொள்ள முடியாதிருந்தது.

## 3.4 பாதுகாப்பு

கண்டறியப்பட்ட அரும்பொருட்களைப் பாதுகாத்தல் தொடர்பில் மாதிரி பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட பல்வேறு பிரதேசங்களுக்குரிய அவதானிப்புகள் பின்வருமாறு ஆகும்.

### 3.4.1 மின்னேரியா நாகலகந்தை தொல்பொருள் இடம்

பொலனறுவை மாவட்டத்தில் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஜுன் 30 வரையான காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுச் செயற்திட்டங்களின் மாதிரிக்கேற்ப மேற்கொண்ட மகாசேன வன ஆச்சிரம பண்டைய ரஜமக விகாரை மின்னேரியா நாகலகந்தை தொல்பொருள் இடத்தின் தாதுகோபுர அகழ்வு மற்றும் பேணும் நடவடிக்கைகயைச் செயற்படுத்தல் தொடர்பில் கணக்காய்வுப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்ட காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) தொல்பொருள் இடமாக வர்த்தமானியினூடாக பிரசுரித்தல்**

இந்த ஆச்சிரமத் தொகுதி மற்றும் தாதுகோபுரம் மாகாசேன மன்னன் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதும் பின்னர் மின்னேரியா விகாரை என அறியப்பட்டதும் என வரலாற்றுத் தகவல்களிலும் மற்றும் மரபு வழிக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. அங்கு அறச்சாலையில் காணப்படும் புத்த பிரதியைக் கிரகத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் 2004 ஆம் ஆண்டு இடமாக பெற்றதன் பின்னர் அறச்சாலைக் காணியை அண்டிக் காணப்படும் தொல்பொருளியல் நினைவுச் சின்னங்களை வெளிக்கொண்டு வருவதற்காக அகழ்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை அவ்வாறே தொல்பொருள் இடமாகப் பெயரிடப்பட்டு அரச வர்த்தமானியினூடாக பிரசுரிப்பதற்கும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சேதங்களுக்குள்ளாகும் இடங்கள் தொடர்பில் முன்னுரிமை வழங்குதல்**

நாகலகந்தை மாகாசேன வன ஆச்சிரமத்தில் இருந்த அறச்சாலைத் சேனாசனாதிபதி சுவாமிகளால் வரலாற்றுச் கேந்திரத்தில் சிதைவடையும் தூாபியைப் பாதுகாதத்துத் தருமாறு ஜனாதிபதியிடம் கோரப்பட்ட மனுவிற்கமைய ஜனாதிபதியின் செயலாளரினால் 2010 திசெம்பர் 10 ஆம் திகதி தூபியின் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) இடத்திற்கான பரீட்சிப்பு**

தூபியின் பாதுகாப்புகளாகத் நிலத்தினைப் பரீட்சித்து அறிக்கையொன்றினைதச் சமர்ப்பிக்குமாறு கட்டடக்கலைப் பாதுகாப்புப் பிரிவில் பதிற்கடமையாற்றும் பணியாளரிடம் 2011 ஜனவரி 11 ஆம் திகதியிலான கடிதத்தின்படி வடமத்திய மாகாணத்தின் பிரதிப் பணிப்பாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதும் அந்த தல பரீட்சிப்பு அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) கிரய அறிக்கையை வழங்கும் வரை காணப்பட வேண்டிய பாதுகாப்பு**

அதன் பின்னர் புத்தசாசன அமைச்சின் செயலாளர் மற்றும் ஹிங்குராங்கொடை பிரதேச செயலாளரினால் தாதுகோபுர பாதுகாப்பிற்காகன அறிக்கையொன்றினை சமர்ப்பிக்குமாறு 2018 ஆம் ஆண்டில் கோரப்பட்ட மனுவிற்கமைய அந்த அறிக்கை 2018 செப்டெம்பர் 01 ஆம் திகதி பாதுகாப்பிற்காக ரூபா 1,977,500 மொத்த செலவு மதிப்பீடொன்று 2018 நவம்பர் 28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையைச் சமர்பபிக்கும் சந்தர்ப்பத்தில் புதையல் எடுப்போரினால் அனுமதியற்ற அகழ்வின் காரணமாக தாது கோபுரத்திற்கு சேதமேற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**(உ) நிதியத்தினைப் பெற்றுக்கொள்ளல்**

மொத்த கிரய மதிப்பீட்டின் படி கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட செலவு விபரங்களின் கீழ் பொழிப்பாக்கப்பட்ட மொத்த செலவு விபரங்கள்

கீழே காட்டப்பட்டள்ளன. அங்கு மொத்த மூலப் பொருட்கள், பதவியணியினர் கொடுப்பனவுகள் மற்றும் கருவி வசதிகள் வழங்கும் நோக்கில் ரூபா 1,977,500 நிதி கோரப்பட்டிருந்தது.

| செலவு விடய விபரம் | அலகு | எண்ணிக்கை | அலகு வழலை | மொத்த செலவு |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| அகழ்வு மற்றும் உருவாக்கலுக்கான தொல்பொருள் உத்தியோகத்தர் மற்றும் உதவியாளர் இணைந்த கொடுப்பனவு மற்றும் போக்குவரத்துச் செலவு | 1 நாள் | 342 | 1,200 | 324,000 |
| செங்கற்கள் (12"*8"*2.25" ) | கட்டி | 20,000 | | |
| சீமெந்து (50 கிலோ கிராம் ) | மூட்டை | 720 | 1,050 | |
| மணல் | கியூப் | 96 | 13,500 | 1,400,000 |
| சுண்ணாம்பு | புகல் | 1,450 | 350 | |
| அகழ்வுக்கான ஆயுதங்கள் கருவிகள் வசதிகளை வழங்கல் | | | | 253,500 |
| | | | | 1,977,500 |

இதற்கமைய ரூபா 2,000,000 அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் நிதியத்தினை ஏற்பாடு செய்து கொள்வதற்காக ஒதக்கீட்டு நிதியானது 2008 ஆம் ஆண்டில் ஹிங்கராங்கொடை பிரதேச செயலாளருக்கு வழங்குவதற்கும் செலவுகளைப் பிரதேசச் செயலாளரின் கட்டுப்பாட்டின் கீழ் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ஊ) அகழ்வு நடவடிக்கைகளின் பாதுகாப்பு**

அகழ்வு நடவடிக்கைகள் 2018 நவம்பர் 20 ஆம் தகிதி ஆரம்பிக்கப்பட்டு தாதுகோபுரத்தினை அறிந்து கொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட அகழ்வினை மேற்கொண்டு 2018 திசெம்பர் 31 ஆம் திகதியின் அகழ்வு நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது. அக்காலப் பகுதியினுள் அகழ்வு நடவடிக்கைகளுக்காக திணைக்களத்தின் பதவியணியினர் 08 பேர் மற்றும் மத்திய கலாசார நிதியத்தின் தொல்பொருள் உதவியாளர் சேவையின் 10 பேரும் சேவையில் ஈடுபட்டிருந்த

போதிலும் அக்காலப் பகுதியினுள் போதியளவினை அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(எ) பதவியணியினரின் செலவினைக் குறைத்தல்**

வேறு தொல்பொருள் இடங்களின் சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் நடமாடும் சேவைக்காக நாகலகந்தை தொல்பொருள் தளத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் தொல்பொருள் திணைக்களத்தின் ஊழியர்களது இணைந்த படிகள் மற்றும் போக்குவரத்து செலவுகளுக்காள 2018 நவம்பர் மாத மொத்த ரூபா 11,985 மற்றும் 2018 திசெம்பர் மாதம் மொத்தம் ரூபா 196,285 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 2018 திசெம்பர் மாதம் ஊழியர்களின் இணைந்த படிகள் போக்குவரத்திற்காக ரூபா 108,000 நிதி விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதும், நிதியை விடுவிக்காது ஹிங்குராங்கொடை பிரதேச செயலாளர் அக்கொடுப்பனவை இடை நிறுத்தியுள்ளதனால் இங்கு குறிப்பிட்ட செயற்பாடுகளின் பின் நடமாடும் சேவையில் ஈடுபடுத்தாது நாகலகந்தை தொல்பொருள் தலத்திற்கு செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் காலத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட காலத்திற்கு இணைக்கப்பட்ட இணைந்த படிகள் மற்றும் போக்குவரத்துச் செலவிற்கான செலவினைக் குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**(ஏ) 03 மாத காலத்திற்கு மேற்பட்ட செயற்திட்டங்களுக்கான பதவியணியினர் கொடுப்பனவுகள்**

2018 திசெம்பர் 31 ஆம் திகதியின் 05/2018 ஆம் இலக்க தொல்பொருள் திணைக்கள சுற்றறிக்கையின் ஒழுங்குகளின்படி 03 மாதங்கள் செலவிடப்படும் வெற்றிடங்களுக்காக பதவியணியினரை உரிய இடத்தில் நிலைப்படுத்த வேண்டியுள்ளதுடன் அதற்கு முரணாக ஊழியர்களை நடமாடும் சேவையில் ஈடுபடுத்தி போக்குவரத்து செலவினை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஐ) கணக்காண்டின் இறுதியில் எஞ்சியுள்ள நிதியேற்பாடு**

செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,000,000 நிதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது ஊழியர்களின் இணைந்த படிகள் மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவிற்கான ரூபா 208,270 மட்டுமேயாகும். ரூபா 1,791,730 ஆன எஞ்சிய

நிதி ஹிங்குராங்கொடை பிரதேச செயலாளரின் பொறுப்பில் காணப்படுவதோடு கணக்குத் தீர்க்கப்படும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் அந் நிதியை பிடித்து வைத்திருப்பதா, எதிர்வரும் செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு நிதியை விடுவிப்பதா என்பது தொடர்பில் பிரதேச செயலாளரினூடாக உறுதி செய்து கொள்வதற்கும் மற்றும் அது தொடர்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

**(ஒ) மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டினை அதிகரித்தல்**

2019 ஆம் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக முதல் மதிப்பீட்டிற்கமைய தூபியின் அகழ்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைக்காக மொத்த செலவு ரூபா 1,977,500 ஆகவும், பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கமைய ரூபா 3,208,740 ஆனதுடன் செயற்திட்ட நடவடிக்கைக்கான மொத்த செலவு ரூபா 5,186,240 வரையிலும் அதிகரிந்திருந்தமை அவதானிக்கப்டப்பட்டது. அவ்வாறு மொத்த செலவு அதிகரிப்பதற்கு தூண்டுதலாக இருந்த காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**(ஓ) பதவியணியினரின் கொடுப்பனவிற்காக மீண்டும் மீண்டும் நிதி ஒதுக்கீடு**

அவ்வாறே அடிப்படை மதிப்பீட்டிற்கமைய தொல்பொருள் திணைக்களத்தின் ஊழியர்களின் இணைந்தபடிகள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் ரூபா 410,000 ஒதுக்கப்பட்டு அதில் ரூபா 393,480 கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் மீண்டும் அதே செயலுக்காக புதிய மதிப்பீட்டில் மேலும் ரூபா 644,300 ஒதுக்கப்பட்டிருப்பதன் மூலம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியின் 05/2018 ஆம் இலக்க தொல்பொருள் திணைக்கள சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளுக்கு முரணாக செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்து.

**(ஔ) செயற்திட்டத்தை முடிவுறுத்தும் திகதியை அறிந்து கொள்ளல்**

செயற்திட்ட நடவடிக்கையை செயற்படுத்துதல் தொடர்பில் கள கணக்காய்வு பரீட்சிப்பு சந்தர்ப்பமான 2019 ஜூன் 15 ஆம் திகதி வரையிலும் அகழ்வு நடவடிக்கை மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளை நிறைவு செய்து செயற்திடட்த்தை முடிவுறுத்த வேண்டிய திகதி தொடர்பில் தீர்மானங்கள் எல்லை முன்வைக்கப்படவில்லை.

### 3.4.2 பொத்குள் வெஹெர பாதுகாப்பகம்

தொல்பொருள் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் செயற்பாடுகளின் கீழ் தொல்பொருள் காப்பகமாக அறியப்பட்டிருந்த பொலநறுவை பராக்கிரம சமுத்திர மேலைப் பிரதேசத்தின் பொத்குள் வெஹெர பாதுகாப்பகத்தை சுற்றிலும் வலை மறுப்புடன் கூடிய பாதுகாப்பு இரும்பு வேலி அமைத்தல், ரூபா 2.3 மில்லியன் மதிப்பிடப்பட்ட மொத்த செலவின் கீழ் மத்திய கலாசார நிதியத்தினால் ஆரம்பிக்கபட்படு நடவடிக்கை செயற்படுத்தப்பட்டு இறுதிக் கூட்டத்தில் காணப்படுகின்றமை கணக்காய்வின் களப் பரீட்சிப்பில் வெளிப்பட்டுள்ளது.

இது தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) காப்பகத்தின் மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளைக் அறிந்து கொள்ளாது இரும்பு வேலி அமைக்கப்பட்டிருந்தது. மேலும் நிலஅளவையாளரின் திட்டம் / நில அளவைப் படத்தின் அடிப்படையில் எல்லைகள் அறியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொத்குள் வெஹெர தெரு முடிவடையும் இறுதியிடம் தொல்பொருள் காப்பகத்திற்குச் சொந்தமான காணித் துண்டில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் வீடுகள் மற்றும் தமன்கடுவை நிகர சபையினூடாக கற்கள் பரப்பட்ட வீதியையும் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தது அந்த காணித்துண்டு தொல்பொருள் காப்பகத்திற்குச் சொந்தமானதென அவதானிக்கபட்ட போதும் எவ்வித பரீட்சிப்பின்றி அந்த காணித்துண்டு விடப்பட்டு இரும்பு வேலி அமைக்கப்பட்டிருந்தெனினும், இது தொடர்பில் பொலநறுவை பிரதேச தொல்பொருள் அலுவலகத்தின் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த வீதி, அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக காணித்துண்டு மற்றும் காப்பகத்தின் மரங்களைத் தவிர்த்து இரும்பு எல்லை வேலிகளை அமைத்திருந்ததுடன் இதனால் எல்லைகள் நேர்கோடாக காணப்படவில்லை. இந்த முறையற்ற நிலையைக் களப் பரீட்சிப்பின் போது சுட்டிக்காட்டப்பட்ட பின்னர், அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் தனிப்பட்ட தேவைகளுக்காகப் தவிர்க்கப்பட்ட காணித்துண்டுகளை மீண்டும் காப்பகத்திலும் எடுத்து நிர்மாணிக்கப்பட்டிருந்த இரும்பு வேலைகளை அகற்றி எல்லைகளை நோக்கி மீளவும் நிர்மாண பணிகள் நடைபெற்றவாறு உள்ளது.

(ஈ) இதற்கமைய தொல்பொருள் காப்பகத்தில் எல்லை வேலி அமைக்கையில் பொலநறுவை தொல்பொருள் பிரதேச அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் போதியளவு மேற்பார்வை இடம் பெற்றிருக்காமையும், அதற்காக முறையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருக்காமையும் அவதானிக்கப்பட்டது.

(உ) மேலும் எல்லைகளில் இரும்பு வேலி நிர்மாணிக்கையில் மத்திய கலாசார நிதியம் மற்றும் குறித்த ஒப்பந்தக்காரர் ஒழுங்கான முறையில் செய்யப்பட்டிருக்கவில்லை. என்பதும், தொல்பொருள் காலத்திற்குரிய காணி அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் பாவனைக்கு இடமளிக்கப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.4.3 வெலிவத்துரேகம ரஜமகா விகாரை

----------------------------------------------------

வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வெலிவத்துரேகம ரஜமகா விகாரை அகழ்வு செய்யப்பட்ட பொத்த விகாரையின் சன்னிதி தூபி மற்றும் கட்டிட இலக்கம் 02 மற்றும் சோமாவதி தொல்பொருள் தலத்தின் அணைப் பாதுகாப்பு நடவடிக்கை 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருந்த போதும் அவற்றை ஆரம்பிப்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.4 28 ஆம் தூண் தொல்பொருள் தளம்

மேலும் 2018 ஆம் ஆண்டில் பொலநறுவை 28 ஆம் கல் தொல்பொருள் தளத்தின் அகழ்வுகளில் வெளிப்பட்டு கண்டறியப்பட்டிருந்த 02 பிரதியைக் கிரகங்கள், தூபிகள் மற்றும் மேலணை பாதுகாப்பு நடவடிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இந்த அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் முடிவுறாது இருப்பதற்கு பாதுகாப்பு, மூலப்பொருட்கள் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டு தாமதம் மற்றும் வினைத்திறனின்மையை என்பன காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4.5 தெமல மகா தூபி, புராதன நகரத்து கிழக்கு – மேற்கு பழைய வீதி தனஞ்சய பண்டைய விகாரையின் தூபி

மத்திய கலாசார நிதியத்தினூடாக பாதுகாப்பு செயல்கள் நிறைவேற்றப்பட்டிருந்த போதும் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட 09 பாதுகாப்புச் செயற்திட்டங்களுல் மேற்குறிப்பிட்ட 03 செயற்திட்டங்களின் செயற்பாடுகளில் மிகப் பலவீனமான முன்னேற்றம்

காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இந்த வெற்றிடங்களுக்கு மதிப்பீடு தயாரித்தல் மட்டும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அகழ்வு நடவடிக்கையெடுக்கப்பட்டு பண்டைய நினைவுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டு முடிவடைந்த உடனேயே பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததனால் அந்தப் பண்டைய விஞ்ஞான ரீதியான நினைவுச் சின்னங்களின் பேணும் காலத்தினை உறுதிப்படுத்தாத காரணத்தினால் அவை அழிவிற்கு உள்ளாகும் அபாயம் நிலவுகின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

### 3.4.6 சோமாவதி தொல்பொருள் தளம்

பொலநறுவை மாவட்டத்தினுள் செயற்படுத்தப்பட்ட மேற்கூறிய தொல்பொருள் நினைவுச் சின்னங்களின் மாதிரிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரீட்சிப்பில் சோமாவதி தொல்பொருள் தலத்தின் மேலணைப் பாதுகாப்பு நடவடிக்கை செயற்படுத்துவதின் குறைபாடுகள் மற்றும் தடங்கல்கள் தொடர்பாக அவதானிக்கபபட்ட காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

#### (அ) சேதமடைந்திருந்த மேலணையை மீண்டும் ஆரம்பித்தல்

சோமாவதி தொல்பொருள் தலத்தின் மேலணையைப் பாதுகாத்தல் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு கிழக்கு முனை தொடங்கி மேற்கு திசை வரையிலும் 100 மிற்றர் தூரத்திற்கு பாதுகாப்பு மேற்கொண்டு பின்னர் நிறுத்தப்பட்டிருந்தது.

வேலணையின் பாதுகாப்பு செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்த இடத்திலிருந்து மேற்குத் திசையில் 350 மீற்றர் நீளமான தூபத்தினைப் பாதுகாப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் மீளவும் ஆரம்பிக்கப்பட்டிருந்ததோடு 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் செயற்பாட்டினை நிறைவு செய்வதற்குச் செயற்திட்ட யோசனை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

செயற்திட்ட யோசனையின் படி ரூபா 2,786,545 மொத்த செலவிற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக மத்திய கலாசார நிதியத்திலிருந்து நிதி ஏற்பாட்டினை செய்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செயற்திட்ட நடவடிக்கைகளுக்கு மூலப்பொருட்களை வழங்குதல்

வழங்கல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த போதும், பாதுகாப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்காதனால் சீமெந்து மற்றும் சுண்ணாம்பு

வழங்கப்பட்டிருந்ததுடன் குறித்த தரத்தில் இல்லாத காரணத்தினால் செங்கற்களும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. 21.5 கியூப் மணல் மற்றும் 165 கியூப் மண் குறித்த வழங்குனர் 2017 திசெம்பர் மாதத்தில் வழங்கியிருந்ததுடன் அதற்காக ரூபா 701,125 வழங்குனருக்கு 2017 ஆம் ஆண்டினுள் செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்களை வேறு செயல்களுக்கு பயன்படுத்துதல்.**

சோமாவதி மேலணைப் பாதுகாப்புச் செயற்திட்ட வளாகத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட மணல் மற்றும் மண் தொடர்பில் 2019 ஜுன் 15 ஆம் திகதி களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரீட்சிப்பில் வழங்கப்பட்ட பொருட்கள் அந்த வளாகத்தினுள் இல்லாமை அவதானிக்கப்பட்டது. மணல் இருப்பினை சோமாவதி புனித கிராமத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக அங்குள்ள சுவாமிகளால் பெற்றுக்கொண்டதாகவும் மண்ணை புனித நிலத்தில் நீர் தேங்கும் பள்ளமான இடங்களை நிரப்புவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதனை மேற்கொண்டது முன்னர் செயற்திட்டத்திற்குப் பொறுப்பாக கடமையாற்றிய மத்திய கலாசார நிதியத்தின் உத்தியோகத்தர் எனவும் செயற்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள தொல்பொருள் திணைக்களத்தின் தொழில் மேன்முறையாளரினால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்தக் காலத்தின் புனித நிலத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக கடமையாற்றிய மத்திய கலாசார நிதியத்தின் உத்தியோகத்தர் 2018 ஆம் ஆண்டு ஓய்வு பெற்று சென்றிருந்தமை மற்றும் அவர் ஓய்வு பெற்ற பின்னர் தொல்பொருள் திணைக்களத்தின் பொலநறுவை பிரதேச அலுவலக தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவர் சோமாவதி புனித நிலத்தின் மேலணைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகக் கடமையாற்றுகின்றமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட போதும் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் அவரிடம் விசாரிக்கையில் தெரிவித்திருந்தாவது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் தன்னிடம் ஒப்படைக்கப்படவில்லை எனவும், பொலநறுவை வலயப் பொறுப்பதிகாரியின் பொறுப்பில் உள்ளது எனவும் ஆகும். கொள்வனவு செய்யப்பட்ட மணல் மற்றும் மண் ஒழுங்கற்ற முறையில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் 18 மாதங்களுக்கு மேலாகி உள்ள போதும் பொலநறுவை பிரதேச உதவிப் பணிப்பாளரினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) **மூலப்பொருட்களை வழங்குவதற்கான கொள்முதல் நடவடிக்கைகளின் காலதாமதம்**

பாதுகாப்பு நடவடிக்கைக்குத் தேவையான பொறியியல் ஒப்பந்தங்களை வழங்க குறைந்த விலைகோரலைச் சமர்ப்பித்திருந்த வழங்குனர் வழங்கியிருந்த செங்கற்கள் எதிர்பார்க்கப்பட்ட தரத்தில் இல்லாத காரணத்தால் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த விலைகோரலை நிராகரித்த பின்னர் 18 மாத சவால்கள் முடிவடைந்திருந்த போதும் பொறியியற் செங்கற்களைக் கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கைகளை இதுவரையிலும் பூரணப்படுத்திக் கொள்வதற்கு தவறியிருந்தது. இந்த நிலைமையின் அடிப்படையில் மேலணைப் பாதுகாப்பு நடவடிக்கை 2017 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் நிறைவு செய்யப்பட வேண்டி இருந்தும் 2019 ஜுன் 30 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) **புராதன பெறுமதியைப் பேணும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

பொறியியற் செங்கற்களை உபயோகித்து மேலணையைப் பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும் திட்டத்தின் மூலம் தொல்பொருளியல் பெறுமதிக்கு சேதம் ஏற்படுமென்பது அவதானிக்கப்பட்டது. சோமாவதி புனித பூமி மகாவலி ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளமையால் தற்காலத்தில் பள்ளதாக்குப் பிரதேசங்களை நிரப்பும் மற்றும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதனால் பண்டைய மேலணையின் வெளிப்பகுதி நன்றாக ஆழமாக அமைக்கப்பட்டிருந்தமையால் காணப்படுகின்ற நிலமையைவிட உயரமாக மேலணையை நிர்மாணித்து இருபுறமும் மண் நிரப்புவதற்கு நடவடிக்கையெடுத்தல் பண்டைய காலத்தில் காணப்பட்ட நிலைமையை மாற்றியமைக்கும் என்பதனால் அவ்வாறு செய்தல் தொல்பொருளியல் பெறுமதிக்கு சேதமேற்படும் என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.4.7 அசையும் அரும் பொருட்கள் தொடர்பான நடவடிக்கைகளைச் செயற்படுத்தல்

திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் தொடக்கம் இன்று வரையான நீண்ட காலத்தினுள் பொலநறுவை மாவட்டத்தில் அகழ்வு ஆய்வு, கள நடவடிக்கை, அன்பளிப்பு போன்றவற்றினூடாகப் பிரதேச அலுவலகத்திற்குக் கிடைத்திருந்த பெருமளவான அசையும் அரும்பொருட்கள் தமன்கடுவை வலய அலுவலக வளாகத்தில் பாவனைப் பொருட்களைச் சேமித்து வைக்கும் களஞ்சியசாலையினுள்

குவிந்தும் மற்றும் அச்சாலையின் வெளி மண்டபத்தில் ''பாதுகாப்பற்று'' வைக்கப்பட்டிருந்தன. அவற்றை ஒழுங்கான முறையில் ஆவணப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்காததுடன் அசையும் அரும் பொருட்களைக் குறித்து வைக்கும் தொகை பதிவேடொன்று உள்ளதாகவும் முன்னாள் வலயப் பொறுப்பு உத்தியோகத்தர் தெரிவித்திருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பாக மேலும் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒவ்வொரு அகழ்வு செயற்பாடுகளின் மூலமும் கிடைக்கப் பெற்ற அரும் பொருட்களைக் கண்டறிந்து போதியளவு பாதுகாப்புடன் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரும்பொருட்களைச் பொதியிடுவதற்காக அதற்குரிய பொதியிடல் பொருட்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) அவசரமான சந்தர்ப்பத்தில் அல்லது கற்கையில் அல்லது அரும்பொருட்களை இலகுவில் தெரிவு செய்யக் கூடிய வகையில் களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நீண்ட காலம் கடந்த பின்னரும் அந்த அரும்பொருட்களை நூதனசாலைப் பிரிவிற்கு ஒழுங்கான முறையில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இத்தகைய முறையில் பாவனைப் பொருள் களஞ்சியமொன்றில் குவித்து வைக்கப்பட்ட காரணத்தால் அந்த அரும்பொருடகள் அழிவடைதல், மாற்றமடைதல், காரணத்தால் தொல்பொருளியல் பெறுமானம் குறைவடைவதும் வணிகப் பெறுமதியுள்ள அரும்பொருட்கள் தொலைந்து போதல் அல்லது காணாமற் போவதற்கு காரணமாவதும் அவதானிக்கப்பட்டது.

### 3.4.8 அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள்

இலங்கையினுள் அமைந்துள்ள அனைத்து தொல்பொருளியல் தளங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களின் எச்சங்களை பாதுகாத்தலும், அவற்றின் ஆயுட்காலத்தை உறுதி செய்து எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்கான சொத்தாக்குவது பாதுகாத்தலின் கடமைப் பொறுப்பாகவும், அந்த நடவடிக்கை கட்டிடக்கலை ரீதியாகவும் மற்றும் இரசாயன ரீதியிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு பின்பற்றப்பட வேண்டிய முறைமைகள் மற்றும் செயல் ஒழுங்கு முறைகளும் பின்வருமாறு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

i. கட்டிடக்கலை ரீதியிலான எச்சங்களை ஆவணப்படுத்துதல்.

ii. தொல்பொருள் நினைவுச் சின்னங்களின் வரலாற்றைப் பாதுகாப்பதற்காக ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தலைக் கோவைப்படுத்தல்.

iii. தடை செய்யப்பட்ட பொருட்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட கட்டிடக்கலை எச்சங்களை பாதுகாத்தல்.

iv. அறிக்கையிடப்படும் நினைவுச் சின்னங்கள் தொடர்பில் பேணப்பட வேண்டிய நினைவுச் சின்னங்கள் தொடர்பாக ஆவணமொன்றை முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தல் மற்றும் தயாரித்தல்.

v. பாதுகாப்பிற்காக வருடாந்தம் வேலைத்திட்டங்களைத் தயாரித்தல்.

vi. வேலைத் திட்டத்திற்குரிய நினைவுச் சின்னம் தொடர்பான அவதானிப்பு அறிக்கை மற்றும் பாதுகாப்பு வேலைகளைத் தயாரித்தல்.

vii. பாதுகாப்பிற்குப் பிரேரிக்கப்பட்ட நினைவுச் சின்னங்களின் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரித்தல்.

viii. மொத்த செலவு மதிப்பீடு தயாரித்தல் மற்றும் நிதி ஏற்பாடு செய்தல்.

ix. வெளிவாரி நிறுவனங்கள் / நபர்களின் நன்கொடைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு தொடர்பான வேலைத் திட்டங்களைத் தயாரித்தல்.

x. பாதுகாப்பிற்கான பொருத்தமான பொருட்களை குறித்த தரத்துடன் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

xi. பாதுகாப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான அனுபவமுள்ள உத்தியோகத்தர்களை மேற்பார்வைக்காக நியமித்தல், பாதுகாப்புச் செயற்திட்டத்தினை தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் கால அடிப்படையில் அறிவுறுத்தல்களை வழங்குதல்.

xii. பாதுகாப்பின் பின்னர் அதன் பராமரிப்புச் செய்வதற்கு கட்சியாளரிடம் / பொறுப்பானவரிடம் அல்லது பராமரிப்புப் பிரிவிடம் கையளித்தல்.

xiii. நிறைவேற்றப்பட்ட பாதுகாப்புச் செயற்பாடுகள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்றைத் தயாரித்தல்.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கையில் மேற்கூறிய படிமுறைகளில் கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்த வேண்டியுள்ளது. எனினும், பாதுகாப்பு செயற்படுத்தல் தொடர்பில் பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) கிரமத்தின் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டிய செயல்களை நிறைவேற்றல்**

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தொல்பொருள் நினைவுச் சின்னங்களின் கட்டிடக்கலையைப் பாதுகாக்கும் நடவடிக்கையைச் செயற்படுத்துகையில் கட்டக்கலை ரீதியிலான எச்சங்களை கண்டறிந்து ஆவணப்படுத்தல், முன்னுரிமை அடிப்படையில் பாதுகாக்கப்பட வேண்டிய தொல்பொருளியல் நினைவுச் சின்னங்களை அறிந்துகொள்ளல், பாதுகாப்பிற்காக வருடாந்த வேலைத்திட்டங்களைத் தயாரித்தல், பாதுகாப்பு வேண்டிய பிரேரிக்கப்பட்ட நினைவுச் சின்னங்களின் திட்டம் மற்றும் பாதுகாப்புத் திட்டம் தயாரித்தல் போன்றவற்றை பாதுகாப்பில் பின்பற்றப்பட வேண்டிய அடிப்படை நடவடிக்கைகயைச் செயற்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் முறையான திட்டமொன்று இல்லாது பாதுகாப்பு நடவடிக்கையைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பாதுகாப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம்**

2001 ஆம் ஆண்டில் அகழ்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பு நடவடிக்கை செயற்படுத்தப்பட்டிருந்த தீதியான தாது கோபுரம் மற்றும் நீலகிரி தாதுகோபுரம் பாதுகாப்பு நடவடிக்கை செயற்படுத்துகையில் குறித்த நடவடிக்கைகளில் மிகவும் பலவீனமான முன்னேற்றம் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இங்கு முகாமைத்துவத்தின் வினைத்திறனின்மையை போன்றே தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட தாமதம் மற்றும் குறித்த தரம் மற்றம் விபரக் குறிப்புக்களுக்கேற்ப வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்காத நிலைமை காணப்பட்டது.

## 3.5 கனிமம் மற்றும் பாறைகளைப் பிரித்தல் நடவடிக்கைக்கான பரிந்துரைகளை வழங்குதல்

### 3.5.1 தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தின் அதிகாரம்

(அ) 1940 இன் 9 ஆம் இலக்க அரும் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் ஒழுங்குவிதிகளின்படி அரச காணியில் அமைந்துள்ள யாதேனும் புராதன நினைவுச் சின்னம் அல்லது யாதேனும் பாதுகாப்பு நினைவுச் சின்னத்திற்கு அப்பால் குறிப்பிட்டளவு தூரத்தினுள் ஏதேனும், காணியொன்றினுள் கட்டிடங்களை நிர்மாணித்தல் சுரங்கம் அகழ்தல், கல் உடைத்தல், அல்லது நிரப்புதல் நடவடிக்கை மேற்கொள்ளலைத் தடை செய்து அல்லது தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் எல்லைப்படுத்தி அல்லது கட்டளையிடும் சட்டரீதியிலான ஏற்பாடுகளின் கீழ் தொல்பொருளியல் சான்றுகளின்றி அல்லது அந்த சான்றுகளுக்கு சேதமேற்படாமையை உறுதி செய்ததன் பின்னர் கனிய மற்றும் பாறைகளைப் பிரித்தல் நடவடிக்கைக்கு தொல்பொருள் பரிந்துரைகள் வழங்கும் அதிகாரம் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) அந்த அதிகாரத்திற்கமைய பொலநறுவை மாவட்டத்தில் பிரதேச அலுவலகம் அமைக்கப்பட்டதன் பின்னர் தொல்பொருள் பிரதேச அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஜுன் 30 வரையான காலத்திற்குரிய கனிய மற்றும் பாறை பிரிந்தெடுத்தல் அனுமதிப்பத்திரத்திற்கு கருங்கல் உடைப்பதற்காக 07 பிரதேச செயலாளர் அலுவலகங்களின் கீழ் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் எண்ணிக்கை 84 ஆகும்.

### 3.5.2 திம்புலாகல, சீரிபுர, மீவன்புர, பஞுதெனிய கிராம பாறைச் சமவெளிகளில் கருங்கள் உடைத்தல்.

இது தொடர்பில் பின்வரும் காரணிகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) அகழ்வு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல்**

மகாவலி வலயத்திற்குரிய காணியான இந்த பாறைச் சமவெளியில் கருங்கல் உடைப்பதிற்காக 2004 ஆம் ஆண்டிற்கு முந்திய காலத்தில் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரையைப் பெற்றுக் கொள்ளாதும் மற்றும் அனுமதியின்றி அடிப்படையில் 04 நபர்களினால் 04 கருங்கல் உடைத்தல் தொழில்கள் நடாத்திச் செல்லப்பட்டிருந்தன. இந்த கருங்கல் உடைத்தல் அனுமதிப்பத்திரத்தை இடை நிறுத்துமாறு சிரிபுர கிராம

உத்தியோகத்தருக்குச் கட்டளையிட்டு திம்புலாகலை பிரதேச செயலாளரின் 2004 பெப்ரவரி 25 ஆம் திகதிய NCP/TB/E/1/8/1 ஆம் இலக்கக் கடிதத்தில் உறுதி செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) அனுமதியற்ற அகழ்வினை தடைசெய்தல்**

பிரதேச செயலாளர் அவ்வாறு சுட்டிக்காட்டிலிருந்த போதும் அந்த ஒழுங்கற்ற பாறை அகழ்வு அனுமதிப்பத்திரத்தைச் செல்லுபடியற்றயதாக்குவதற்கு மற்றும் 1940 இன் 09 ஆம் இலக்க அரும் பொருள் கட்டளைச் சட்டத்தின் பிரதேசத்தில் முன்னாள் பிரதேச உதவிப் பணிப்பாளர் மற்றும் முன்னாள் தொல் பொருள் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்படவில்லை. அதற்கமைய மேலும் கல்லுடைக்கும் நடவடிக்கை இடம் பெறுவதற்குள்ள சந்தர்ப்பத்தில் கல்லுடைக்கும் செயல் புரிந்த 04 நபர்கள் தொடர்ந்தும் பாரியளவில் கருங்கல் உடைக்கும் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

**(இ) அரும் பொருட்கள் அழிவடைதல் தொடர்பான ஆய்வு அறிக்கை**

‘‘பளதெனிய அடிப்படை ஆய்வு’’ எனும் தலைப்பில் பாறைச் சமவெளி ஆய்வு நடவடிக்கை 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆய்வு அறக்கையின் படி தூபிக் கட்டடம், கூப்பு வாசல் மண் அறிகுறி, கல்வெட்டு எச்சங்கள், கல்வெட்டு தூண்கள், கட்டட இடிபாடுகள் போன்ற நினைவுச் சின்னங்கள் மற்றும் பணிகள், களிமண் கருவிகள், இரும்புக் கருவிகள், பாறைகள் போன்ற கலாச்சார எச்சங்கள் பாறைச் சமவெளியின் வடக்குக் கரையின் உயரமான இடத்தில் அமைந்திருந்தது. அப் பகுதியில் கல் உடைக்கும் நடவடிக்கை ஒருவரினால் மேற்கொள்ளப்படுகின்றமையும், அங்கு கல் உடைப்பதற்கு இடத்திற்கிடம் தன்னியக்கப் பொறிமுறையில் வெளிப்புற மண் அகழும் நடவடிக்கை காரணமாக அரும் பொருட்கள் சேதமாக்கப்பட்டுள்ளமையும், சேதமடைந்த அந்த இடர்பாடுகள் புவி மேற்பரப்பில் பரவிக் காணப்படுகின்றமையும், அறியப்பட்டது. இதன் காரணமாக கல்லுடைக்கும் நடவடிக்கை தாமதமின்றி நிறுத்தப்பட்டு அந்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல், தளத்தில் தற்போது சேதமடைந்து காணப்படும் தொல்பொருள் எச்சங்களைப் பாதுகாத்தல், பிரதேசத்தினை தொல்பொருள் காப்பகமாக பிரகடணப்படுத்தல், முறையான ஆய்வினை மேற்கொண்டு தொல்பொருளியல் நினைவுச் சின்னங்களை தொல்பொருள் ஆவணப்படுத்தல் மற்றும் இந்த தலத்தில் காணப்படும் தற்போது கிராமங்களுக்குரியதாகக் காணப்படும் அப்பொருட்கள் தொடர்பில் பொருத்தமான வழிமுறைகளை எடுத்தல் போன்ற பரிந்துரைகள் ஆய்வு

அறிக்கையில் சமர்ர்பிக்கப்பட்டிருந்த போதும் பரிந்துரைகளைச் செயற்படுத்தல் தொடர்பில் அப்போதிருந்த தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) தொடர்ந்தும் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்**

நிலைமை இவ்வாறிருக்க பாறைச் சமவெளியில் கருங்கல் உடைப்பதற்குத் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின் அடிப்படையில் உதவிப் பணிப்பாளரினை (அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள்) 2005 மார்ச் 18 ஆம் திகதி வழங்கப்பட்ட பரிந்துரையின் படி பிரதேச செயலாளரிால் ஒரு நபருக்கு கல் உடைக்கும் பாறை அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**(உ) இரத்துச்செய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தினை மீண்டும் செயற்படுத்தல்.**

பின்னர் பொலநறுவை தொல்பொருள் அலுவலகத்தில் ஆய்வு உத்தியோகத்தரொருவர் அப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட களப் பரீட்சிப்பின் போது தொல் பொருள் சான்றுகள் காணப்படும் பாறைச் சமவெளியில் வட முனையில் முன்னர் குறிப்பிடப்பட்ட நபரினால் முறையான அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டிருந்த கல்லுடைக்கும் நடவடிக்கை காரணமாக வெளிப்புறத்திலுள்ள தொல்பொருளியல் சான்றுகள் சேதமடைந்து வருவதற்காகவும் பாறைச்சமவெளிகளில் மேற்புறம் அல்லது அதன் அண்மையில் எவ்விதமான பண்டைய சான்றுகள் வெளிப்புறத்தில் அறிந்து கொள்வதற்கு முடியாத அளவிற்கு சேதமடைந்து உள்ளமையும் அவதானிக்கப்பட்டு அதைப்பற்றி தமது களப்பரீட்சிப்பு அறிக்கையினூடாக வட மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான பிரதேச தொல்பொருள் உதவிப் பணிப்பாளருக்கு 2006 டிசம்பர் 01 ஆம் திகதி தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய கல்லுடைக்கும் நடவடிக்கையை இடைநிறுத்தி அனுமதிப்பத்திரத்தை செயலிழக்கச்செய்ய நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அவரால் 2006 டிசம்பர் 22 ஆம் திகதி தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திடம் தெரிவிக்கப்பட்ட மேன்முறையீட்டிற்கு அமைய தடைசெய்யப்பட்ட கல்லுடைக்கும் நடவடிக்கையை மீண்டும் நடாத்திச் செல்வதற்கு முன்னாள் பணிப்பாளர் நாயகம் மற்றும் முன்னாள் உதவிப் பணிப்பாளர் (அசையும் மற்றும் அசையாச் சொத்துக்ள்) உத்தியோகத்தரினால் 2007 ஜனவரி 31 ஆம் திகதி அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

**(ஊ) அனுமதிப்பத்திரம் வழங்குதலை நியாயப்படுத்துதல்**

குறித்த கோவையில் காணப்பட்ட அறிக்கை குறிப்பிற்கமைய அந்த அனுமதியை வழங்குவதற்கு காரணமாக முன்னாள் உதவிப் பணிப்பாளர் (அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள்) உத்தியோகத்தர் 2007 ஜனவரி 24 ம் திகதி அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. குறித்த ஒப்பந்த காரரின் பலத்தினைப் பரீட்சிக்கையில் அந்தக் கல்லில் பாதுகாக்க்பட வேண்டும் என கருதும் அரும்பொருள் எஞ்சியிருக்காமையால் அந்த பாறைச் சமவெளியின் பகுதியில் கல்லுடைக்கும் நடவடிக்கையை நடாத்திச் செல்வதற்கு வேறு ஒருவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தமையால் அவருக்கு மட்டும் அனுமதி வழங்குவதனால் முதுலாவது நபருக்கு அநியாயம் ஏற்படும் என்பதாகும்.

**(எ) சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல்**

மீண்டும் அனுமதிப்பத்திரத்தினைப் பெற்று கருங்கல் உடைக்கும் சந்தர்ப்பத்தில் மகாவலி அதிகார சபை மேற்கொண்ட தொடர்நடவடிக்கையில் முதலாவது நபருக்கு வழங்கப்பட்ட கல்லுடைக்கும் இடத்தில் பண்டைய சான்றுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டு அவற்றை உறுதிசெய்து கொள்வதற்கு ''பண்டைய சான்றுகள் உள்ளனவா என்பது தொடர்பில் அறிக்கையிடுமாறு'' இலங்கை மகாவலி அதிகார சபையின் வதிவிட விற்பனை முகாமையாளரினால் 2008 நவம்பர் 06 ஆம் திகதி தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்ததொடு பிரதேச ஆய்வு உத்தியோகத்தரினால் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட களப்பரீட்சிப்பில் வெளிப்படுத்தப்பட்ட வகையில் அந்த இடத்தினை பாரியளவில் கல்லுடைக்கும் இடமாக்கி அரும்பொருட்களைச் சேதமாக்க உள்ளமையால் மீண்டும் அவ்வாறான அனுமதிப்பத்திரங்களை வழங்காது இருக்க பரிந்துரைத்தல் பொருத்தமானது என அறிக்கையிடப்பட்டிருந்தது. அங்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு பிரேகரிக்கப்பட்டிருந்தது.

**(ஏ) வன்மையை கண்டிப்பதற்கு மட்டும் கட்டுப்படுத்தல்**

மேற்கூறிய நிலைமையில் அடிப்படையில் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட முதலாவது நபர் கருங்கல் உடைக்கும் நடவடிக்கையை 2009 ஆம் ஆண்டு நிறுவுத்தியிருந்தார். மேலும் கனிய மற்றும் பாறை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு தொல்பொருள் பரிந்துரையை வழங்கி தொல்பொருளியல் சான்றுகளைச் சேதப்படுத்தியதாகத் தெரிவித்து

பொலநறுவை பிரதேச ஆய்வு உத்தியோகத்தர் இருவருக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை மேற்கொள்ப்பட்டு அந்த உத்தியோகத்தர்களை வன்மையைக் கண்டிப்பதற்கு முன்னாள் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் நடவடிக்கை எடுத்திருந்தார்.

**(ஐ) காணப்படுகின்ற அரும்பொருட்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்**

மேலும் இந்த பாறைச் சமவெளிக்கு அண்மையில் காணப்படும் அரும்பொருட்கள் பிரதேச வாசிகளால் எடுத்துச் செல்லப்பட்டு அவற்றை தம்வசம் வைத்திருப்பதாக கணக்காய்வில் வெளிப்பட்டுள்ளதுடன் அந்த அரும்பொருட்கள் தொடர்பில் தேடியறிந்து அறிக்கையிட்டு ஆவணப்படுத்தல் அல்லது அவற்றை திணைக்களத்திற்கு உரித்தாக்குவதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 மெதிரிகிரிய-திக்கல்புர கிராம பாறைச்சமவெளியில் கருங்கல் உடைத்தல்

இது தொடர்பில் பின்வரும் காரணிகள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட அடிப்படை அவதானிப்புக்கள்**

i. பாறைச்சமவெளியானது 20 ஏக்கர் அளவிலான நிலப்பரப்பில் பரந்து காணப்பட்டதுடன் பிரதேசமும் மற்றும் பாறைச்சமவெளியும் அரசிற்கு சொந்தமான காப்பகமென அவதானிக்கப்பட்டது.

ii. 2004 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலம் தொடக்கம் கருங்கல் உடைக்கும் நடவடிக்கையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த காலத்தில் கனிய மற்றும் பாறை அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு தொல்பொருள் பரிந்துரைகள் பெறப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

iii. நீண்டகாலம் தொட்டு தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றி கருங்கல் உடைக்கும் நடவடிக்கை பாரியளவில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த அனுமதியற்ற கருங்கல் உடைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்தினால் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது கருங்கல் உடைக்கும் செயற்பாட்டினை இடைநிறுத்தி ஒழுங்கற்ற

முறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரத்தை தடைசெய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iv. 2004 ஆம் ஆண்டில் தொல்பொருள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் ஆய்வுப்பிரிவினூடாக களப்பரீட்சிப்பினை நடாத்தியுள்ளமை குறித்த கோவைகளிலுள்ள எழுத்துமூல சாட்சியங்ளின் அடிப்படையில் வெளிப்பட்டுள்ளது. அந்த சாட்சியங்களின் அடிப்படையில் பாறைச் சமவெளியில் தொல்பொருளியல் சான்றுகள் காணப்படுகின்றது அவதானிக்கப்பட்டது.

v. திக்கல்புர பாதுகாப்பகம் பிரதேசத்தில் தொல்பொருள் சான்றுகள், பண்டைய நினைவுச் சின்னங்கள் அரும்பொருட்கள் தொடாப்பான ஒழுங்கான ஆய்வொன்றை மேற்கொண்டு புராதன சான்றுகளைக் கண்டறிந்து கொள்வதற்கும் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் அந்த காலத்தில் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

vi. இதற்கமைய கருங்கல் உடைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையால் திக்கல்புர பாறைச்சமவெளியில் காணப்பட்ட புராதன சான்றுகள் இதுவரையிலும் முழுமையாக அழிவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) களப்பரீட்சிப்பின் போது வெளியிடப்படல்**

பாறைச்சமவெளியின் கருங்கல் உடைக்கப்பட்டு கைவிடப்பட்டிருந்த மற்றும் தற்பொழுது கருங்கல் உடைக்கும் இடத்திற்கு அண்மையில் கருங்கல் உடைக்கும் நடவடிக்கை தொடர்பான கணக்காய்வு காணப்படும் களப் பரீட்சிப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் அவதானிக்கப்பட்ட காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

i. புராதன சான்றுகள் காணப்படுவதாக களப்பரீட்சிப்புக்களில் கண்டறியப்பட்ட பாரைச்சமவெளியின் மத்திய நிலப்பகுதியில் பாரை முகடு போன்று தரைமட்டத்தில் இருந்து தரை மட்டத்திலிருந்து 30 அடி உயரத்திற்கு எடுக்கப்பட்டு காணப்பட்டது.

ii. அந்த நிலப்பகுதியைச் சுற்றி கல் உடைக்கும் நடவடிக்கை தரை மட்டத்திலிருந்து 05 அடி ஆழத்திற்கு மேற்கொள்ளப்படுவதனால் அந்த நிலப்பகுதி பாறை முகடு போன்று எடுக்கப்பட்டு காணப்பட காரணமாக உள்ளது. புராதன சான்றுகள் காணப்படும்

பாறைச்சமவெளியை அண்டிய குறிப்பிட்ட தூரத்திற்கு (100, 150, 250, 400 போன்ற வகையில்) நிலத்தினை விடுத்து, அந்த கைவிடப்பட்ட நிலப்பகுதியைச் சுற்றி பாறைச் சமவெளியின் ஏனைய இடங்களுக்கு கருங்கல் உடைக்கும் அனுமதிப்பத்திரத்திற்குப் பதிலாகப் பரிந்துரைகளை வழங்கியதன் மூலம் இந்த நிலைமை தீவிரமடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய புராதனச் சான்றுகள் காணப்படும் இடத்தினைச் சூழ குறிப்பிட்டளவு தூரத்திற்கு வெளிப்புறத்தில் கருங்கல் உடைக்கும் அனுமதிப்பத்திரப் பரிந்துரைகள் வழங்கப்படுவதற்குப் பதிலாக புராதனச் சான்றுகள் காணப்படும் முழுச் பாறைச் சமவெளியிலுமே கல் உடைக்கும் நடவடிக்கைக்கு அனுமதி வழங்கியிருந்தமை இதற்கான காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

iii. இந்த பாறை முகட்டின் வெளிபுறம் பெருந்தொகையான மண் படிவுகள் அதனோடு இணைந்து கல் உடைக்கும் சந்தர்ப்பங்களில் அகற்றப்பட்டு வெளிப்பறம் பண்டைய சான்றுகளைக் கண்டறிய முடியாதவாறு சிதைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

iv. கணக்காய்வுப் பரீட்சிப்புக்காக களத்திற்குச் செல்லும் சந்தர்ப்பத்திலும் அந்த நிலப்பகுதியில் அனுமதியற்ற கருங்கல் உடைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தமையும் அந்த இடத்திற்கு அருகில் சென்றவுடன் கருங்கல் உடைக்கும் நபர்கள் நீங்கிச் சென்றிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

v. அந்த பாறைச் சமவெளியை அண்டிய பகுதியில் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டு கருங்கல் உடைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளும் நபர்கள் மூவரை அழைத்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவர்களால் கணக்காய்விற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. தமது உறவினர்கள் எனவும், வாழ்வாதாரத்திற்காக மேற்கொள்ளப்பட்டதெனவும் ஆகும்.

vi. ஆயினும் கணக்காய்வின் போது அவதானிக்கப்ட்டதாவது அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டு கருங்கல் உடைக்கும் நடவடிக்கையை மேற்கொள்பவர்கள் இயந்திரங்கள், பார ஊர்திகள், கொண்டு அனுமதியற்ற கருங்கல் உடைத்தலை மேற்கொள்வதாகவும் உடைக்கப்பட்ட கருங்கற்கள் அவர்களின் இயந்திர அறையினுள் அரைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், அவர்களின்

இயந்திரக்கூடங்களுக்கு தேவையான கருங்கல் துண்டுகளை வழங்கும் வழங்குனர்கள் என்பதும் ஆகும்.

vii. இவ்வாறாக அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொண்ட அல்லது பெறப்படாமலேயே கருங்கல் உடைந்து அந்த இடத்தினைச் சூழக் காணப்படும் தொல்பொருளியல் சான்றுகளை சிதைத்து இலங்கையின் கலாசாரத்திற்குப் பாரிய பங்கத்தினையும் மற்றும் பாரியளவில் சுற்றாடலுக்குக் கேட்டையும் ஏற்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு முன் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

அதிகளவில் பாறைச் சமவெளிகளுடன் கூடிய உயர்ந்த நிலத்தினை அண்டிய பொலநறுவை காலத்தின் பண்டைய கலாசார இலட்சணங்களின் எச்சங்கள் காணப்படுகின்றமை களத்தினை கணக்காய்வுப் பரீட்சிப்பக்களி போது வெளிப்பட்டுள்ளமையால் கனிய மற்றம் பாறை அகழ்வு அனுமதிப்த்திரத்திற்கு தொல்பொருள் பரிந்துரைகள் பெற்றுக்கொள்கையில் அதனைச் சூழ ஆய்வொன்றினை மேற்கொண்டு புராதன சான்றுகள் காணப்படாமையை தீர்க்கமாக உறுதி செய்து கொண்டதன் பின்னரே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். எனினும் அவ்வாறு இடம் பெற்றிருக்கவில்லை.

**(ஈ) அனுமதிப் பத்திரம் வழங்குகையில் பின்பற்றப்படும் தவறான வழிமுறைகள்**

பாறைச் சமவெளிகளின் மேற்புரத்தில் மண் அடுக்குகளை இயந்திரங்களினால் அகற்றி, வெளிப்புற மேற்பரப்பில் புராதன சான்றுகள் காணப்படாத வகையில் சுற்றாடலைத் தவிர்த்து, அதன் பின்னர் கருங்கல் உடைக்கும் அனுமதிப் பத்திரத்திற்கு தொல்பொருள் பரிந்துரையினைப் பெற்றுக் கொள்வதற்குப் பெரும்பாலான கருங்கல் உடைப்போர் தயாராக உள்ளமை கணக்காய்வுப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டமையால், அந்த சந்தர்ப்பத்தில் வெளிப்புறத்தில் புராதன சான்றுகள் காணப்படாமையைக் கருத்திற் கொண்டு அனுமதிப்பத்திரத்திற்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தது.

**(உ) அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் செய்யப்பட வேண்டிய தொடர் நடவடிக்கை**

கனிய மற்றும் பாறை அகழ்வு அனுமதிப்பத்திரத்திற்குத் தொல்பொருள் பரிந்துரையினை பெற்றுக்கொடுத்தன் பின்னர் அந்த பரிந்துரைகள் வழங்கப்பட்டதற்கான நிபந்தனை ஒழுங்குகளின்படி கருங்கல் உடைத்தல் நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பில் பிரதேச உதவிப் பணிப்பாளரின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டு வலயப் பொறுப்பதிகாரியின் பரீட்சிப்பு மற்றும் தொடர் நடவடிக்கை செய்யப்பட வேண்டி இருந்த போதும் அந்த உத்தியோகத்தர்களால் மேற்பார்வை கட்டுப்பாடு மற்றும் பரீட்சிப்பு இடையறாது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அனுமதியற்ற கருங்கல் உடைக்கும் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அது அரும்பொருட்களின் அழிவிற்கு ஏதுவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது

## 3.6 பாதுகாப்பற்ற மற்றும் அழிவடையும் ஆபத்திற்கு முகங்கொடுத்துள்ள தொல்பொருள் தளங்கள்

வடகிழக்குப் பிரதேசத்தில் மாதிரிப் பரீட்சிப்புக்கு உள்ளான அவ்வாறான பல தொல் பொருள் இடங்கள் தொடர்பில் அவதானிக்கப்பட்ட காரணிகள் பின்வருமாறு ஆகும்.

### 3.6.1 அம்பாறை மாவட்டம்

அம்பாறை மாவட்டத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுக்காகப் பரீட்சிப்பின் போது பௌதீகப் பரீட்சிப்புக்கு உள்ளான தொல்பொருள் தளங்களின் நிலைமை பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

**(அ) மாணிக்க மடு தொல் பொருள் தலம்**

i. அம்பாறை மாவட்டத்தில் ஏரகம பிரதேசச் செயலாளர் பிரிவில் அமைந்துள்ள தொல்பொருளியல் பெறுமதிகளுக்கமைய இந்தத் தளமானது தீகவாவி சூழ்ந்த தூபியானதுடன் சேதமடைந்துள்ள தூபியின் கலைக்கப்பட்ட இடிபாட்டுத் துண்டுகள் கற் குன்றுகளின் முகட்டிலும் கீழ் பகுதிகளிலும் காணக்கிடைத்துள்ளன.

ii. பண்டைய கல்லணையொன்றின் இலட்சிணைகளுடனான இடங்கள் நிலப்பரப்பு எங்கும் பரப்பியுள்ள மட்பாண்டத் துண்டுகள், ஓட்டுத் துண்டுகள், கற்குகை போன்ற தொல்பொருளியல் ரீதியில் முக்கிய சான்றுகள் பல காணப்படும் இந்த இடம் அழிவடையும் ஆபத்தில் உள்ளது.

iii. இந்த தளத்தில் பாறைகளில் உள்ள கல்வெட்டுச் சாசனத்தில் அழிந்து போன எழுத்துக்களின் பலவற்றை காணக்கிடைத்ததுடன் அவை தொடர்பில் சம்பிராதாய ஆய்வொன்றை மேற்கொண்டிருக்காததுடன் களப் பரீட்சிப்பும் செய்யப்பட்டிருக்கவில்லை.

iv. தொல்பொருள் திணைக்களத்தினால் எல்லைக் கற்களை வைத்து திணைக்களத்திற்குச் சொந்தமான நிலத்தின் அண்ணளவாகப் பிரிந்திருந்த போதும் அளவிடல் நடவடிக்கைகள் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளைத் தாண்டியும் தொல்பொருளியல் சான்றுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் அந்நிலையில் கீழ் நிலத்தினில் காட்டப்பட்டுள்ள எல்லைகளை மாற்றி தொல்பொருளியல் சான்றுகளுடன் கூடிய முழு நிலமும் உள்ளடங்குமாறு மீளவும் எல்லைக் கம்பங்களை இடப்பட வேண்டுமென்பதைப் பிரதேச தொல்பொருள் உத்தியோகத்தர்கள் அறிந்திருந்த போதிலும் இது வரையிலும் அந்த நடவடிக்கையைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

v. பிரதேசத்தில் காணப்பட்ட தீவிரவாத செயற்பாடுகள் காரணமாக தங்கியிருந்த சுவாமிகள் உள்ளிட்ட ஆரம்ப குடியிருப்பாளர்கள் வீடுகள் உள்ளிட்ட காணிகளைக் கைவிட்டு பாதுகாப்பான இடர்களை நோக்கிச் சென்றிருந்ததோடு, தற்காலம் வரையிலும் அந்நியர்களினால் போலி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு உரிமை கொள்ளப்பட்டு கிட்டிய முன்னைய இருவருட காலத்தினுள்ளும் மற்றும் 2019 ஆம் ஆண்டு காணியினைப் பிரித்தல் மற்றும் தற்காலிக நிர்மாணங்களை மேற்கொண்டு தொல்பொருள் சான்றுகள் காணப்படும் நிலத்தினை கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் போது தொல்பொருள் எல்லைத் தூண்களை கழட்டி அகற்றுதல், எல்லைத் தூண்கள் நடப்பட்டுள்ள இடங்களை மாற்றுதல் என்பன இடம்பெற்றிருந்தன

vi. சேதமடைந்து காணப்படும் இந்த இடத்தினைப் பாதுகாப்பது தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்தினால் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்காததோடு சேதமடைந்து காணப்படும் அரும் பொருட்கள் மற்றும் இந் நிலத்தைப் பாதுகாப்பதற்கு தலத்திற்கான பரீட்சிப்பினை மேற்கொண்டு இந் நிலத்திற்கு நில வரைபடங்கள் வரைந்து சேதமடைந்துள்ள தாது கோபுரம் உள்ளிட்ட ஏனைய நினைவுச் சின்னங்கள் பாதுகாக்கப்படல் தேவையான அகழ்வு நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தாமதிக்காது மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் காணப்படுகின்றது.



(அழிவடையும் ஆபத்திற்கு உள்ளாகியுள்ள மாணிக்கமடு தொல்பொருள் தலம் மற்றும் பேணுதல் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தப்பட வேண்டிய தலங்கள்)

### (ஆ) அழிக்கப்பட்டுக் காணப்படும் மெட்டயால தொல்பொருள் தளம்

அம்பாறை அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அக்கறைப்பற்று சாயம வீதியில் உள்ள மெட்டயால தொல்பொருள் தளம் தொடர்பாக இலங்கை வான்படை தலைமையகத்தின் உளவுத்துறை 2019 ஓகஸ்ட் 16 ஆம் திகதியிடப்பட்டு தொல்பொருள் பணிப்பாளர் நாயத்திற்கு அனுப்பியுள்ள காரணிகள்

வெளிப்படுத்துவதற்கமைய அந்த இடம் மற்றும் காணப்படுகின்ற அரும் பொருட்களை பேணுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

I. இந்தத் தொல்பொருள் தலம் 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 31 ஆம் திகதி தொடக்கம் 03 மாத காலத்தினுள் குறித்த பிரதேசத்தில் வாழ்வோர்கள் தமது வயல் காணியிணைப் பெருப்பிக்கும் நோக்கில் குழுவாக ஒன்றினைந்து டோசர் செய்யப்பட்டு அழிக்கப்பட்டிருந்தது.

II. மேற்கூறிய அழிதலுக்கு எதிராக கிழக்கு மாகாண பிக்குகள் உள்ளிட்ட குழுக்களினால் செய்யப்பட்ட எதிர்பார்ப்பின் அடிப்படையில் தலத்தினை டோசர் இட்டு அழித்த செய்த இரு நபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய பின்னர் ரூபா 25,000 தண்டப் பணத்தினை அறவிட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தனர். அதன் பின்னர் இந்தத் தொல்பொருள் தலத்தினைப் பாதுகாப்பதற்குப் போதியளவு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் தற்போது அந்தத் தலத்தில் பொருத்தப்பட்டிருந்த தொல்பொருள் பெயர்ப் பலகையைச் சேதப்படுத்தி அந்தக் காணியை விவசாயத்திற்காக டிரக்டர் கொண்டு அழிக்கப்பட்டிருந்தமையும் அறிக்கையிடப்படடிருந்தது.

**(இ) டோசர் தாதுகோபுரம்**

அம்பாறை திசாவாவி தொல்பொருள் வலய அலுவலகத்திற்குரிய அட்டாளைச்சேனை பள்ளக்காடு கிராமததில் அமைந்துள்ள இந்தத் தொல்பொருள் தலம் பல வருடங்களுக்கு முன்னர் இந்தக் காணியில் உள்ள தூபி உள்ளிட்ட தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் முழுமையாக டோசர் கொண்டு சேதமாக்கப்பட்டிருந்தது. அந்தத் தலம் 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் 18 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

i. இந்தத் நிலத்தில் காணப்பட்ட தாது கோபுரம் முழுமையாகத் தரை மட்டமாக்கப்பட்டிருந்ததுடன், பல வருடங்களுக்கு முன்னர் இந்தக் காணியில் அனுமதியற்ற மண்ணகழ்வு இடம்பெற்றிருக்காமையை உறுதிப்படுத்துவதற்கும் சான்றுகள் காணப்பட்டன.

ii. தூபியை அழித்தல் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியிலேயே அனுமதியற்ற நிர்மாணங்களும் மற்றும் அனுமதியற்ற குடியேற்றங்களும் இடம்பெற்றிருந்தன.

iii. தொல் பொருள் திணைக்களத்தினால் இந்த நிலத்திற்கு எல்லைத் தூண்கள் நடத்தப்பட்டிருந்த போதிலும் அளவையிடப்பட்டு அளவைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கமைய அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iv. எல்லைத் தூண்கள் காட்டப்பட்ட இந்தத் காணியினூடாக அனுமதியற்ற வீதியினை அமைத்து உபயோகிக்கப்படுத்தும் நிலைமை அவதானிக்கப்பட்டது நியமிக்கப்பட்ட இருவார ஈடுபடுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் இந்த தொல்பொருள் தலத்திற்கு போதுமானளவு பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

v. இந்த தலத்தில் தற்காலம் வரையிலும் சம்பிரதாயமான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அகழ்வு, பாதுகாப்பு நடவடிக்கைகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்குத் தேவையான திட்டமிடப்படவோ இடம்பெற்றிருக்கவில்லை.

vi. தூபி அமைந்துள்ள இடத்தின் காணியை அனுமதியற்ற தோண்டுதல்களுக்கு உட்படுத்தியுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

**டோசர் தாகபை**





## (ஈ) மகுல் மகா விகாரை

அம்பாறை லாபுகல பிரதேச செயலளாளர் அலுவலகம் அமைந்துள்ள மகுல் மகாவிகாரை தொல்பொருள் தலத்தை 2019 செப்டெம்பர் 19 ஆம் திகதி பரீட்சிக்கையில் பின்வரும் நிலைமைகள் அவதாளிக்கப்பட்டன.

I. தொல்பொருள் நூதனசாலையொன்றை நடாத்திச் செல்வதற்கு 2010 ஆம் அண்டில் நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த கட்டடம் 2013 ஆம் ஆண்டில் வேலைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்வரும் உபயோகப்படுத்தப்படாது மூடிவைக்கப்பட்டுள்ளது.

II. 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் இந்த கட்டிடத்தில் CCTV கமரா தொகுதி பொருத்தப்பட்டிருந்த போதும் நூதனசாலை ஆரம்பிக்கப்படாதால் அவற்றை இயக்குவதற்கான தேவையும் இல்லாமையால் கணக்காய்வு செய்யப்பட்ட தினம் வரையிலும் செயற்படுத்தப்படாத நிலையிலேயே காணப்பட்டது.

III. மகுல் மகா விகாரையின் சன்னிதி, மேலணை, தூபி ஆகியவற்றின் அகழ்வு நடவடிக்கைகள் 1980 தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை வெளிப்பட்ட போதும், அந்த அகழ்வுகளில் கண்டு பிடிக்கப்பட்ட அரும் பொருட்கள் இலக்கமிடப்பட்டு ஆவணப்படுத்தும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

IV. நூதனசாலை கட்டிடத்துடன் இணைந்து காணப்படும் வலய அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தினுள் மகுல் மகா விகாரையின் அகழ்வுகளில் கண்டெடுக்கப்பட்ட நூதனப் பொருட்களைப் போன்றே நீலகிரி தூபி அகழ்வதன் மூலம் கண்டுபிடித்த நூதனப் பொருட்களும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றுன் இலக்கமிடப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டிருந்த எண்ணிக்கை 270 ஆகவும் காணப்படுகினற் நூதனப் பொருட்களும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றுள் இலக்கமிடப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டிருந்த எண்ணிக்கை ஆவணப்படுத்தப்படாது உள்ளமை வெளிப்பட்டுள்ளது.

அவற்றுள் மகுல் மகா விகாரையின் அகழ்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட நூதனப் பொருட்களும் பெருந் தொகையானவை அவற்றுள் உள்ளமை வெளிப்பட்டுள்ளது.

V. இந்தத் இடத்தில் காணப்படும் பழைமை வாய்ந்த நினைவுச் சின்னங்கள் உள் முற்றத்தில் காணப்படும் தூபி 1978 இன் பாதுகாப்பட்டிருந்ததுடன் சந்திர வட்டக் கல்லுடன் கூடிய இடிபாடுகள் கொண்ட கட்டிடத்தின் சன்னிதி, மேலணை ஆகியவற்றை பேணிப் பாதுகாத்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

VI. உள்முற்றத்தினுள் முன்னைய அகழ்வுகளில் அகற்றப்ட்ட மண் ஒழுங்கற்ற முறையில் வெளியேற்றப்பட்டமையால் மண் கட்டடமாக காணப்பட்டதுடன், அதன் மூலம் நிலத்தின் அங்கரிப்பிற்கு பாதிப்பு ஏற்பட்டது. போன்றே நினைவுச் சின்னங்களைப் பார்வையிடுவதற்கும் பாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது. மழை நீர் வடிந்து செல்வதற்கு மண்ணானது கட்டம் போன்று அமைந்துள்ளது தடையொன்றாக உள்ளது.

VII. உள் முற்றத்தில் காணப்படும் சந்திர வட்டக்கல்லுடனான இடிபாடுகளைக் கொண்ட கட்டம் தொடர்பில் பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

- இலங்கையில் காணப்படும் ஏனைய பழங்கால இடங்களிலிருந்து கிடைத்துள்ள சந்திர வட்டக்கற்களின் சித்திரங்களின் காணப்படும் இலட்சணங்களைப் போன்றே அவற்றில் இல்லாத விசேட கடைசல்களின் அமைப்புடனான இவ்வாறான சந்திர வட்டக்கல் கிடைக்கப்பெற்ற ஒரே இடமாதக இந்த சந்திர வட்டக்கல் அறியப்பட்டுள்ளது ஆயினும், மழை நாட்களில் ஒன்று சேரும் நீரினால் முழுமையாக சந்திர வட்டக்கல் மூடப்படுவதோடு பின்னர் தொழிலாளர்களை ஈடுபடுத்தி அந்த நீரை அகற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

- மழை நீருடன் சேற்று மண்ணும் சேருவதனால் இங்குள்ள அனைத்து தோரண அலங்காரம், விலங்கு உருவகங்கள், செதுக்கற் சிற்ப சாயல்கள் மூடப்படுவதனால் அவற்றை இடைவிடாது சுத்தப்படுத்த வேண்டியிருப்பதனாலேயே சந்திர

வட்டக்கல்லிற்கு பாதிப்பு ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது.

- சந்திரவட்டக்கல்லுடன் கூடிய இந்தக் கட்டடம் தேவையயான அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கண்காட்சி நிலைக்குப் பொருத்தமான வகையில் பேணப்படுதல் உடனடியாக செய்யப்பட வேண்டிய நடவடிக்கை எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

VIII. இங்கு காணப்படும் வெளி முற்றத்தின் நிலைமையைப் பரீட்சிக்கையில் பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

- மேலணை சேதமடைந்து இடிபாட்டு நிலைமையில் காணப்படுவதுடன் இதுவரையிலும் அதனைப் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- இந்தத் தொல்பொருள் இடத்திற்கு எல்லைத் தூண்கள் நடப்பட்டிருந்த போதும் அளவையிடப்பட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.
- இங்கு 02 கல்வெட்டுச் சாசனங்களும் மற்றும் வாயிற் கல்லும் காணப்பட்டதுடன் கல்வெட்டுச் சாதனங்களுக்கு கெடுதல் ஏற்படக் கூடிய சேதங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு பாதுகாப்புச் செய்யப்பட வேண்டியுள்ளது.
- வெளி முற்றத்தில் பல பெரிய குளங்கள் காணப்பட்டதுடன் ஒரு குளத்தினைப் பேணும் நடவடிக்கை மத்திய கலாசார நிதியத்தின் பதவியணியிரால் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் அந்தக் குளத்தின் அகழ்வு மற்றும் பேணும் நடவடிக்கைகளுக்குத் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர்களின் மேற்பார்வையோ அல்லது பங்களிப்போ காணப்படவில்லை. அங்கு தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வு மற்றும் பேணல் செயற்பாடுகளின் தீர்மானங்களுக்கமைய மேற்கொள்ளப்படுகின்றமையும் அவதானிக்கப்படவில்லை. அங்கு மத்திய கலாசார நிதியத்தின் நிலையைப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் நபரின் மேற்பார்வையின் கீழ் அந்த பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்ததுடன் அவர் தொழில்நுட்ப உத்தியோகத்தரல்ல என்பதும் அவளிடம் மேற்கொண்ட விசாரணையில் வெளிப்பட்டுள்ளது.

ix. மேற் கூறிய நிலைமைகளில் மகா விகாரையைப் பார்வையிட வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவரிடம் கட்டணம் அறவிட நுழைவுச்சீட்டுகளை வழங்குவதற்கு 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் தொடக்கம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**மகுள் மஹா விகாரை**



நூதனசாலையொன்றினை நிர்மாணிப்பதற்காக நடாத்திச் செல்வதற்காக பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டிடம்



நூதனசாலையொன்றினை நிர்மாணிப்பதற்காக நடாத்திச் செல்வதற்காக பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கட்டிடத்தின் சீசீடீவீ கட்டமைப்பு









### (உ) சாஸ்த்ரவெல தொல்பொருள் தலம்

அம்பாறை நகரிலிருந்து 90 கிலோ மீற்றர் அளவு தூரத்தில் பொத்துவில் பிரதேசம் செயலாளர் வலயத்தினுள் அமைந்துள்ள இந்த விகாரை மணிநாக பப்பத போதிகிரி விகாரை என அறியப்பட்டதோடு தற்போது அந்த விகாரையில் மொத்த அறப்பள்ளியொன்று நடாத்தப்பட்டு வருகின்றது. இந்தத் தொல்பொருள் தலத்தின் 2019 செப்டெம்பர் 18 ஆம் திகதியிலான பரீட்சிப்பின் போது பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

i. இருபது (20) ஏக்கர்களுக்குக் கிட்டிய நிலப் பரப்பிணைக் கொண்ட இந்த தொல்பொருள் தலம் 2014 ஆம் ஆண்டில் ஆரம்ப ஆய்வு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த தலத்திற்கு எல்லைத் தூண்கள் நடப்பட்டிருப்பினும் அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ii. இந்தத் தலத்தில் பாறை நீர் வழி விளிம்பு செதுக்கப்பட்ட பிரதிமைக் கிரகம் காணப்பட்டதுடன் சிற்பம் சேத்திற்குள்ளாகி இருந்ததுடன் செங்கல் அணையும் அழிவடைந்திருந்தது.

iii. இந்தத் தொல்பொருள் நிலப்பரப்பில் உயரமான இடத்தில் அமைந்துள்ள மூன்று சிறிய தூபிகள் புதையல் தேடும் சேதமாக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு தூபியில் 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்தச் தலத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை மிகுதி இரு தூபியிலும் புதையல் தேடும் நோக்கில் தோண்டப்பட்ட இரண்டு குழிகள் காணப்பட்டன.

iv. மேற்கூறிய மூன்று தூபிகளை விட அளவில் பெரிய வேறு தூபியொன்று இந்த விகாரையின் கீழ்ப் பகுதியில் இருந்து அது அழிவுக்குட்பட்டிருந்தது. இடர்பாடுகளாக உள்ள இத் தூபியின் செங்கற்கள் சுற்றுப்புறத்தில் பரவிக் காணப்பட்டதுடன் சேதமாக்கப்பட்ட காலப் பகுதி அறிந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த நிலப்பரப்பினைச் சுற்றியுள்ள மலைக்குன்றுகள் சேதமாக்கப்பட்ட வேறு தூபிக் கட்டிடங்கள் காணப்படுவது அவதானிக்கப்பட்டது.

v. இந்த நிலப்பரப்பில் ஐந்து குகைகளில் தியானத்தில் ஈடுபடும் பிக்குகள் இருப்பதுடன் தொல்பொருள் நிலமாக குறைப்படியான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அகழ்வு மற்றும் பேணுதல்

நடவடிக்கைககளைத் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டிய இடமாக அவதானிக்கப்பட்டுள்ளது.

vi. இந்த நிலத்தில் கல்வெட்டுச் சாசனமொன்று காணப்படுவதோடு அவற்றுள் காவந்திஸ்ஸ அரசர் பற்றி எழுதப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்ட போதும் கல்வெட்டு மற்றும் நாணயவியல் பிரிவினால் ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்ட கல்வெட்டுச் சாசனமெனக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த தகவல்களின் படி உறுதி செய்யப்படவில்லை.

**சாஸ்த்ரவெல தொல்பொருளியல் தளம்**



### 3.6.2 மட்டக்களப்பு மாவட்டம்

---------------------------------------

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட களப் பரீட்சிப்பில் வெளிப்பட்ட பாதுகாப்பங்ங மற்றும் சேதமடையும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ள தொல்பொருள் தலங்களின் விபரங்கள். பின்வருமாறு ஆகும்.

## (அ) விகாரைத் தோட்டம் தொல்பொருள் தளம்

அவதானிப்புக்கள் பின்வருமாறு ஆகும்.

i. இந்தத் தொல்பொருள் இடமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பிரதேசம் செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாவடிவேம்பு கிராமத்தில் 02 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 08 ஏக்கரிலும் கூடிய நிலப் பரப்பினைக் கொண்ட தொல் பொருள் நினைவுச் சின்னம் மற்றும் அரும் பொருட்கள் நிறைந்த பாதி நிலமாகும். ஏறாவூர் நகரின் திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதியில் 13 மீற்றர் பயணம் செய்த பின் வலது பக்கத்தில் உள்ள மாவெடி வேம்பு மாவத்தையில் 2 கிலோ மீற்றர் அமைந்துள்ளது.

ii. வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து அநுராதபுரம் காலத்துக்குரியது எனக் கருதும் தொல்பொருள் சான்றுகள் பல காணக்கூடியதாக உள்ளதுடன், பிக்குகளால் பளன்படுத்தப்பட்ட பொத்த சமய விகாரையொன்றாக கருதப்படுகின்றது. தூபியினை அடிப்படையாக கொண்ட கற்தூண்களுடனான கட்டிடங்களை கொண்ட இந்த இடம் முழுமையாக டோசர் இடப்பட்டு சேதமாக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது தொல்பொருளியல் திணைக்களத்தினால் ஆரம்ப இனங்காணல் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், 2019 செப்தம்பர் 20 ஆந் திகதிய கணக்காய்வு பரிசோதனை திகதி வரையிலும், சம்பிரதாயபூர்வ ஆய்வு மேற்கொள்ளல், அகழ்வு நடவடிக்கைகள் அல்லது பாதுகாப்பு பணிகளுக்கான திட்டமொன்றேனும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

iii. சேதமாக்கப்பட்ட தூபியின் செங்கல் பகுதிகள் சுற்றிலும் பரவிக் காணப்படுவதுடன், செங்கல்கள், தூபியின் நிர்மாணத்திற்கு எடுக்கப்படும் கற்களின் பகுதிகள், தூபியின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் கட்டிடங்கள் அமைந்திருந்ததாக இனங்காணக்கூடிய கட்டிடங்களின் கற்தூண்களின் பகுதிகள், கல் அத்திவாரங்களை கொண்ட கட்டிடங்களின் எச்சங்கள், குடும்பி கற்கள் மற்றும் கடைசல்கள் இல்லாத சந்திர வட்டக்கல் காணப்பட்டமை இனங்காணப்பட்டிருந்தது. தூபி அமைந்திருந்த இடத்தின் சுமார் நான்கு மீட்டர்கள் அளவு நீளமும் அகலமும் கொண்ட

சுமார் ஒரு மீற்றர் ஆழத்திற்கு தோண்டப்பட்டிருந்த அனுமதியற்ற அகழ்வு தொடர்பில் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அது அவ்விடத்தில் அரும் பொருட்கள் இருக்குமென கருதி அவற்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டவை என்பது உறுதிசெய்யப்படுகின்றது.

(iv) மனித தலையீட்டிற்குள்ளாகியுள்ள அரசிற்கு சொந்தமான இந்த இடத்தின் ஒரு பகுதி 2018 ஆம் ஆண்டின் மூன்று நபர்களினால் இடத்தினை மூன்று துண்டுகளாகப் பிரித்து தற்காலிக நிர்மாணத்தினை அமைத்து பயிரிடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அந்த தற்காலிக நிர்மாணிப்புக்கள் பின்னர் நிரந்தரமாக்கக்கூடிய வாய்ப்புக்களும் இருந்தன. அவர்களினால் கைப்பற்றக்கூடிய மூன்று காணித்துண்டுகளிலும் காணப்பட்ட அரும்பொருட்கள் சேதமாக்கப்பட்டிருந்ததுடன் ஒருவர் இந்நிலம் மண்ணிறைந்த இடமாகையால் தனது காணித்துண்டின் தூபியின் அழிக்கப்பட்ட மண்ணைக்கொண்டு பயிரிடல் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தார்.

(v) பண்டைய பௌத்த தாதுகோபுரத்துடனான அரும்பொருட்கள் உள்ள காணியினை சுத்தப்படுத்துவது தொடர்பில் 2019 ஜூன் 26 ஆம் திகதி பிக்கு ஒருவரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கமைய குடியிருப்பாளர் ஒருவரை பொலிசார் கைது செய்து 2019 ஜுலை 10 வரையிலும் விளக்கமறியலுடன் வைத்திருந்ததுடன் விடுதலை பெற்று வந்தவுடன் அந்த நிலத்தில் தற்காலிக நிர்மாணிப்பை அமைத்து பயிரிடலில் ஈடுபட்டிருந்தமை 2019 செப்தெம்பர் 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பில் உறுதிசெய்யப்பட்டது. இந்த அனுமதியற்ற குடியிருப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அரும்பொருட்கள் சேதமாக்கப்பட்டமையை கீழுள்ள படங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

**விகாரைத்தோட்டம் தொல்பொருள் தளத்தில் அனுமதியற்ற குடியேற்றமும் மற்றும் சேதமாக்கலும்**



vi. இந்த தொல்பொருள் நிலத்திற்கு அம்பாறைத் து'ண்கள் அமைத்தல் 2019 செப்தெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் எல்லைத்தூண்கள் நடுதல் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பண்குடாவெளி தொல்பொருள் தளம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடிப்பிரதேசம் செயலாளர் அலுவலக அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள இந்த தொல்பொருள் தலத்தின் 2019 ஓகஸ்ட் 22 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பில் பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்படடன.

i. பதுளை, மட்டக்களப்பு பிரதான வீதியில் எல்லையாக அமைந்துள்ள இந்த தொல்பொருள் இடமானது 2018 ஆம் ஆண்டில் அந்த வீதியை அபிவிருத்தி செய்து அகலமாக்குகையில் இருந்த தூபியின் மேலணை பிரதான வீதியின் கீழ் உட்படுத்தப்பட்டிருந்தது. தற்பொழுது இந்த தொல்பொருள் இடமானது பிரதான வீதியினால் இரு பகுதிகளாக ஆக்கப்பட்டுள்ளதுடன், வீதியினை அபிவிருத்தி செய்து புதிய நிர்மாணத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்த இடத்தில் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த அகழ்வுகளின் மூலம் மேலணை வீதிக்கு அடியில் இருந்தமை அறியப்பட்டிருந்தது. அதற்கமைய பிரதேச தொல்பொருள் அலுவலகத்திற்கும் மற்றும் தொல்பொருள் தலைமை அலுவலகத்திற்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டிருந்தபோதும் தொல்பொருள் திணைக்களத்தினால் அந்த நிலைமையை மாற்றுவதற்கு செயற்படும் விதமாக தலையீட்டிருக்கவில்லை. அம்பாறை பிரதேச தொல்பொருள் அலுவலகத்தினால் தொல்பொருள் தலைமை அலுவலகத்திற்கு 2019 ஆம் ஆண்டிலேயே அறிவிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

ii. இந்த தொல்பொருள் தலத்தினால் தலத்தினைச்சூழ சனங்களற்ற பாரிய சமதரை நிலமொன்று காணப்படுதல் வீதியினை நிர்மாணிக்கும் திட்டம் தயாரிக்கையில் தொல்பொருள் நிலத்தினை பாதுகாக்கும் வகையில் அந்த திட்டத்தினை தயாரித்து வீதி நிர்மாணிப்பினை செயற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உள்ளனவா என்பது தொடர்பில் வீதியை நிர்மாணிக்கும் போது கவத்தில் கொள்ளப்படாததுடன் அது தொடர்பில் தொல்பொருள் திணைக்களமும் வேண்டுகோள் விடுத்திருக்கவில்லை.

iii. சேதமாக்கப்பட்ட இந்த தூபியின் அகழ்வு நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டால் மூன்று சந்தர்ப்பங்களின் கீழ் இடம்பெற்றிருந்ததுடன் அகழ்வுகளின் கண்டறியப்பட்டிருந்த பாத்திரத்துண்டங்கள் மண்கருவிகளுக்கு மேலதிகமாக அகழ்வு செய்யப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பத்தில் கல்லினால் செய்யப்பட்ட பேழைகள், நாணயங்கள் போன்ற 21 அரும்பொருட்கள் அம்பாறை தொல்பொருள் அலுவலகத்தின் கையளிக்கப்பட்டுள்ளன. கண்டுபிடிக்கப்பட்ட அந்த அரும்பெருட்களுக்கு இரசாயண பாதுகாப்பு செய்யப்படாததுடன் அம்பாறை தொல்பொருள் அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிலையில் கிடைத்திருந்த அரும்பொருட்கள் பூமிக்கடியில் காணப்பட்டதை விடவும் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தன.

iv. இந்த தொல்பொருள் நிலத்திற்கு எல்லைத்தூண்கள் நடுவதற்கு எல்லைக்கற்கள் கொண்டுவரப்பட்டிருப்பினும் அவற்றை நடுதல் இடம்பெற்றிருக்கவில்லை. இந்த நிலத்திலும் அளவையிடல் செய்யப்பட்டிருக்காததுடன் அளவையிடல் திட்டமும் காணப்படவில்லை.

v. மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய செங்கலடி வலய அலுவலகம் இந்த இடத்திலேயே செயற்பட்டு வருவதுடன் அது தகர தகட்டினை கொண்டு தற்காலிகமாக இடமாகக் காணப்பட்டது. அந்த இடத்திற்கு தொல்பொருள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் தொல்பொருள் ஊழியர் மற்றும் இருவர் மட்டும் தொல்பொருள் அலுவலர் ஐவரும் இணைக்கப்பட்டிருந்தனர்.

**(இ) உசலன மலை தொல்பொருள் தளம்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி வலயதிற்குரிய இந்த தொல்பொருள் நிலமானது 2019 செப்தெம்பர் 22 ஆம் திகதி பௌதீக பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்ட போது பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டது.

i. இந்த தொல்பொருள் இடத்தில் அளவையிடல் மேற்கொள்ளப்பட்டு அளவையிடல் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் தொல்பொருள் திணைக்களத்தினால் எல்லைத்தூண்கள் அமைப்பதற்கு தூண்கள் கொண்டுவரப்பட்டிருந்ததாலும் அவற்றை தடுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. ஆய்வு உத்தியோகத்தர்களின் தீர்மாணம் மற்றும் எல்லைகள் சரியான முறையில் காட்டப்படாமை என்பன இந்நிலைமைக்கு காரணமாக இருந்தது.

ii. 2018 ஆம் ஆண்டின் ஆரம்ப ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்ட போது பாரம்பரிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iii. இந்த நிலத்தில் அகழ்வுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் எவ்விதமான பாதுகாப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

iv. பாறைச்சமவெளிகள் நிறைந்து காணப்படும் உயர் நிலத்தில் காணப்படும் இந்த தொல்பொருள் தலத்துடன் இணைந்த தாழ்நிலத்தில் வயல் நிலம் மற்றும் குளமொன்றும் அமைந்துள்ளதுடன் தொல்பொருள் நிலத்தில் அனுமதியற்ற 03 நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த நிர்மாணிப்புக்கள் 2019 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு கிட்டிய ஆண்டில் புதிதாக அமைக்கப்படடமை அவதானிக்கப்பட்டது. அவற்றுள் புதிதாக நிர்மரிணக்கப்பட்ட பாழடைந்த கோயில் ஒன்றும் உள்ளதுடன் அந்தக்காணியானது அண்மையிலே கைப்பற்றப்பட்டிருந்ததுடன் புதிதாக இடப்பட்டிருந்த கொங்கிறீட் தூண்களுக்கு அமைய அது உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதற்கமைய இந்த தொல்பொருள் தலத்தினை பாதுகாத்துக்கொள்ள போதுமானளவு பாதுகாப்பு வழங்க தொல்பொருள் திணைக்களம் தவறியுள்ளது.

v. இந்த தொல்பொருள் நிலத்தில் காணப்படும் தூபி சிதைவுக்கு உட்பட்டுள்ளமையும் தொல்பொருள் நிலத்திற்குரிய மலை முகட்டிலேயே கோயில் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையும், 20 இற்கு அதிகமான கல்வெட்டு சாசனங்கள் காணப்படுகின்றமையும் வலய உத்தியோகத்தரினால் கணக்காய்வு வெளிப்படுத்தப்படாதிருந்தது.

**(ஈ) கரந்தகன எல தொல்பொருள் தளம்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி (ஏறாவூர்பற்று) பிரதேச செயலாளர் பிரிவில் செங்கலடி வலய அலுவலகத்தினுள் அமைந்துள்ளது. அந்த இடம் கரந்தகல எல - 01 மற்றும் 02 என அறியப்பட்டிருந்தது. 2019 செப்தெம்பர் 22 ஆம் திகதி அந்த இடத்தினை பரீட்சிப்புக்கு உட்படுத்தும் போது கரந்தகல எல - 01 தளத்திற்குரிய பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

i. பாறைச் சமவெளியில் நிர்மாணிக்கப்பட்ட சிதைவடைந்துள்ள இரண்டு தூபிகளின் இடிபாடிகள் காணப்படடதுடன் பிரதேசத்தில் சுற்றாடலில் தூபியின் செங்கற்துண்டுகள் கவர்ந்து காணப்படடன.

ii. இந்த தளத்தில் கல்வியலாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அகழ்வு பேணுதல் நடவடிக்கை எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை.

iii. 2017 ஆம் ஆண்டில் இந்த தலத்தில் ஆரம்ப ஆய்வொன்றை மேற்கொண்டு எல்லைத்துண்டுகள் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆரம்ப ஆய்வில் பங்குபற்றியவர்களின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளும் வரையிலும் எல்லைத்தூண்கள் சிதைபட்டுள்ளதாக கணக்காய்வில் அவதானிக்க்பட்டது.

கரந்தன எல - 02 தளத்திற்குரிய பின்வரும் நிலைமைகள் அவதானிக்கப்பட்டன.

i. இந்தத் தலத்தில் அனுமதியற்ற அகழ்வினால் சேதமாக்கப்பட்ட 05 தூபிகளின் இடிபாடுகள் காணப்படுவதுடன் தோண்டப்பட்ட குழிகளையும் காணக் கிடைத்துள்ளது.

